# மண்

இதழ் 192

ஜேர்மனி / 2018
கார்த்திகை - மார்கழி
November - December



வாழும்போதே வாழ்த்தப்படும் மூத்த எழுத்தாளர்

பொன் குலேந்திரன் - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














கிளிநொச்சி ஜெயபுரம் ரூத் மிஷன் சிறுவர் காப்பகத்துக்கு தமது செலவில் 800-00 யூரோ பெறுமதியான மடிக்கணனி மற்றும் பொருட்களை அனுப்பி வைத்த திரு திருமதி மகாலிங்கம் குடும்பத்தினரையும் (Oberhausen-Germany) இப்படங்களில் காணலாம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

| | |
|---|---|
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| தொலைபேசி: | 0203/8073898 |
| தொலைநகல்: | 0203/8073898 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

## அதிகாரப்போட்டிகள்....நாடு எங்கே போகிறது?

இலங்கைப் பாராளுமன்றம் கலைக்கப்படுமா இல்லை தொடருமா? ஒழுங்கற்ற நிலையில் இழுபட்டுக் கொண்டிருக்கும் பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தொடர்வது பற்றிச் சபாநாயகர் என்ன முடிவை எடுக்கப்போகிறார்? ஜனாதிபதியின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படி அமையப்போகிறது? தற்போதிருப்பதைப்போன்ற சூழல் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்? அப்படி நீடித்தால் நாட்டின் எதிர்காலம் எப்படி அமையும்?

இப்போது இந்த உறுதியற்ற ஆட்சிச் சூழலைப் பயன்படுத்தி மது விற்பனை நிலையங்களுக்கான அனுமதி, மணல், கல், கிறவல் அகழ்வுக்கான அனுமதிகள், பெறுமதிமிக்க அரச காணிகளுக்கான அனுமதி, வேலை ஒப்பந்தங்களுக்கான அனுமதி போன்றவற்றைச் செல்வாக்குள்ள வட்டாரங்கள் கையகப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சட்டத்துக்குப் புறம்பான காரியங்களை சட்டபூர்வமாக விதிமுறையின்படி செய்கின்றன. இது நாட்டைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கும்

ரணில் விக்கிரமசிங்க இன்னும் எவ்வளவு காலம் அலரி மாளிகையில் தங்கியிருக்கப்போகிறார்? தான் பதவியிலிருக்கும் வரையில் ரணிலைப் பிரதமராக்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார் ஜனாதிபதி. சஜித் பிரேமதாஸவுக்குப் பிரதமர் வாய்ப்புக் கிட்டுமா? இப்படிப் பல கேள்விகள். ஆனால், அடுத்ததாக என்ன நடக்கப்போகிறது என்று கடவுளுக்கே தெரியுமோ தெரியாது. எனவே பதில் தெரியாத கேள்விகளோடு நாடு தள்ளாடுகிறது.

பதில் தெரியாத பதில் காணமுடியாத கேள்விகளோடு ஒரு நாடிருக்கிறது என்றால் அது பார்வையற்றவர்களின் சாம்ராஜ்ஜியமே. சட்டவரம்பை மீறிச் செயற்படுகிறார் ஜனாதிபதி. அரசியலமைப்புச் சாசனத்துக்கு எதிராக நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக் கொண்டு தன் விருப்பப்படி செயற்படுகிறார்... என்று குற்றம்சாட்டுகிறார்கள் எதிர்த்தரப்பினர். சபாநாயகர் பக்கச்சார்பாகச் செயற்படுகிறார். ஆகவே அவரை ஏற்க முடியாது என்று சொல்கிறார்கள் புதிய அரசாங்கத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தைப் படித்துவிட்டுப் பாராளுமன்றத்துக்கு வாருங்கள் என்கிறார் சபாநாயகர். இப்படியே மாறி மாறி தினமும் குற்றச்சாட்டுகள் வந்தபடியே உள்ளது. இன்று நாட்டின் வளர்ச்சியை விட, மக்களின் நலனை விட அவரவர் நலனும் பதவிகளும்தான் முக்கியமாகி விட்டன. இதைப்பற்றிக் கேட்டால், நாங்கள் நாட்டின் பாதுகாப்புக்கும் அரசியல் மேன்மைக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமாகவே பாடுபடுகிறோம். போராடுகிறோம் என ஒவ்வொரு தரப்பும் ரெடிமேற் பதிலைச் சொல்கின்றன.

இது மேலும் குழப்பத்தையும் எரிச்சலையும் ஊட்டுவதாகப் புத்திஜீவகள் தெரிவிக்கின்றனர். நடந்து கொண்டிருப்பவை நல்லவையல்ல என்பது எல்லோருக்குமே தெரிந்தது. அப்படியிருந்தும் இதை மாற்றியமைக்க வேண்டும். இந்தத் தளம்பல் நிலையை முடிவுக்குக் கொண்டு வர வேணும் என ஏன் யாரும் விரும்பவில்லை. அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் என்ற வரையறையைக் கடந்து இந்த நிலையைச் சுமுகமாக்குவற்குப் பலரும் முன்வர வேண்டும். அல்லது இதை மாற்றியமைக்க முற்படுவது அவசியம்.

ஏனெனில் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் தவணை முறையில் மரணம் என்ற மாதிரியே நாட்டின் நிலை ஆகிக்கொண்டிருக்கிறது. இப்போதுள்ள சூழலை மாற்றி, நிலைமைகளைச் சுமுகமாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியது. முதற் பொறுப்பு நாட்டின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதிக்குரியது. இழுபறி அரசியல் அதிகாரப் போட்டிகள் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும். மக்களின் இயல்புவாழ்வு நிரந்தரமாக வேண்டும். இல்லையேல் இரத்தக்களரிகளும் மனிதஅழிவுகளும்தான் எஞ்சிவுடும் என்பதை அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ளல் வேண்டும். இது எழுதும்வரை நம் நாட்டின் நிலை இப்படி இருக்கின்றது. நாளை என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியவில்லை. காலம் பதில் சொல்லட்டும்!...

-ஆசிரியர்-

வாசக நேசங்கள் அனைவருக்கும் நத்தார் - புதுவருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## பாம்பொடு பழகேல்....

பாம்பு என்ற வார்த்தையே பீதியை உண்டாக்கக்கூடியது. "பாம்மைக் கண்டால் படையும் நடுங்கும்" என்று ஒரு பழமொழியே உண்டு. பாம்பின் விஷம் அத்தனை கொடியது. நஞ்சுடைய இந்த ஜீவனுக்கு நாம் எதை ஆதராரமாகத் தருகிறோம்? இனிய சுவைகொண்ட பாலை இனிய பாலைக் குடித்தாலும் பாம்பினுடைய நச்சுத்தன்மை மாறுவதில்லை. இப்படிப் பாம்பைப்போல நாம் நன்மை செய்தாலும் தீமை செய்யும் கொடியவர்கள் சிலர் உலகில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களோடு நீ பழகக்கூடாது என்பதை வலியுறுத்த ஔவைப்பாட்டி இத்தகைய கொடியவர்களையும் பாம்பாகவே உருவகப்படுத்தி உங்களுக்குப் போதனை செய்கிறார். இங்கு தமிழ்ப்பாட்டி குறிப்பிடுவது நச்சுப்பாம்பை மட்டுமல்ல பாம்பின் குணம்கொண்ட கொடியவர்களையும்தான்!.....

## பிழைபடச் சொல்லேல்....

கல்வி கேள்விகளில் வல்லமையும் புலமையும் பெற்றவர்களின் செயல் எப்படி இருக்க வேண்டும்?.. குற்றம் ஏதுமில்லாமல் பேசவேண்டும் இல்லையா?.. பிழை இல்லாமல் பேசுபவர்களே பெரியோர். பிழை இல்லாதவர்களின் பேச்சையே மக்கள் மதிப்பார்கள். போற்றிப் புகழ்வார்கள். பற்பல நூல்களைக் கற்றவர்கள் குற்றம் உண்டாகும்படி பேசலாமா?..அப்படிப் பேசினால் அவரை யாருமே மதிக்கமாட்டார்கள். ஆகவே நீ குற்றமின்றிப் பேசவேண்டும். பிறரால் மதிக்கப்படுபவனாக, கௌரவிக்கப்படுபவனாக வளரவேண்டும் என்று ஆசைப்படுகிறார் ஔவைப்பாட்டி. பிழைபடச் சொல்லேல் என்றுகூறிப் பல நூல்களைக் கற்றவர்கள்தான் பிழைபடப் பேசக்கூடாது என்பதில்லை நூல்களைக் கற்கும் மாணவர்களாகிய நீங்களுமே பிழைபடப் பேசக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை... (வாக்குண்டாம்)

1-

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்

தென்னமரம் இருக்கின்றது, நீர் ஊற்றி வளர்க்கின்றோம். நீர் எங்கே ஊற்றுகிறோம்?..வேரிலே ஊற்றிய நீர் என்னாகிறது. தலையிலே வருகிறது எப்படி வருகிறது?. சுவையுள்ள இளநீராக வருகின்றது. அது போல ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கு நன்மையே விளையும். இது உறுதி. "இவருக்கு உதவினால் நமக்கு நன்மை வருமா?..அது எப்போது வரும்" என்று யோசிப்பது கூடாது. நன்மை செய்ய வேண்டும். அவ்வளவுதான். பலன் தானாகவே கிடைக்கும். அதை எதிர்பார்த்துச் செய்யக்கூடாது. நல்லவனுக்கு உதவி செய்தால் அது வீணாகாது. நன்றியுடன் பிரதியுபகாரம் செய்வான்..

2-

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே-அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

"உதவி செய்யவேண்டும் பலனைப்பற்றிச் சிந்திக்கக்கூடாது" என்றார் முன் பாட்டிலே. உதவி செய்யவேண்டுமென்றால் யாருக்கு?.. உலகத்திலே உதவிவேண்டாதார் யார்?.. நல்லாரும் வேண்டுகின்றனர் பொல்லாரும் வேண்டுகின்றனர். எளிய மனமுடையாரும் வேண்டுகின்றனர். எவருக்கு உதவுவது?.. அது உன்விருப்பம் எவர்க்கு வேண்டுமானாலும் உதவி செய்யலாம். நல்லவருக்கு உதவி செய்தால் அது நலம் தரும். என்றும் நிலைத்திருக்கும். எதுபோல் கல்லிலே செதுக்கிய எழுத்துப் போல் தீயவருக்கு உதவி செய்தாலோ அது அந்த நிமிடமே உபயோகமற்றதாகும். நீரில் எழுதுவதுபோல நீரிலே எழுதினால் நிலைக்குமா?..தெரியுமா?.. படிக்கமுடியுமா?..அந்த எழுத்து எவர்க்காவது பயன்தருமா?.. நல்லவர்க்குச் செய்யும் உதவி கல்லில் செதுக்கிய எழுத்துப்போல நிலைத்திருக்கும். தீயவருக்குச் செய்யும் உதவியினால் ஒரு பயனுமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயல்.....

செல்வி.நிசா முருகானந்தன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

அது கடற்கரையை அண்டிய கிராமம். அங்குள்ள அனைவரும் மீன்பிடித்தொழில் செய்துவந்தனர். அங்கே கடவுள் பக்தி நிறைந்த ஒருவர் இருந்தார். எந்நேரமும் கடவுளைத் தரிசித்தே வந்தார். ஒருநாள் மாலை நேரம் ஒருவர் ஓடோடி வந்தார். "ஐயா..."ஐயா" இன்னும் சிறிது நேரத்தில் கடல் பொங்கி இப்பகுதியை சூழவுள்ளதாம்..அனைவரும் மேட்டுப் பகுதிக்குத் தப்பிச் செல்கின்றனர். நீங்களும் வாருங்கள் தப்பிச் செல்லலாம்". என்றார். ஆனால் அவரோ "எல்லாம் அவன் செயல் என்னைக் கடவுள் காப்பாற்றுவார்" நான் வரவில்லை என்றார்.

சிறிதுநேரத்தில் அப்பகுதியில் வெள்ளம் பெருகியது. அதனால் அனைவரும் தப்பிச் சென்றனர். அந்தப் பக்தர் மட்டும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அப்போது ஒரு சிறிய படகை ஓட்டிக்கொண்டு வெள்ளத்தில் ஒருவர் வந்தார். "ஐயா வாருங்கள் தப்பிச் செல்லலாம். படகில் சீக்கிரம் ஏறுங்கள்" என்றார். ஆனால் அந்தப் பக்தர் "எல்லாம் அவன் செயல் என்னைக் கடவுள் காப்பாற்றுவார்" என மறுத்துவிட்டார். இன்னும் சிறிது நேரத்தில் மேலும் வெள்ளம் பெருகியது. இவர் வீட்டுக்கடவாயில் ஏறி நின்றார். அவ்வேளையில் ஒரு சிறிய விமானம் பறந்து வந்தது. நூலேணியை இறக்கி "ஏறி வாருங்கள் தப்பலாம்" என்றனர். இதற்கு அவர் "எல்லாம் அவன் செயல் என்னைக் காக்கக் கடவுள் இருக்கிறார்." என்று மறுத்துவிட்டார். வெள்ளம் மேலும் பெருகவே அந்தப் பக்தர் வெள்ளத்தில் மூழ்கி இறந்துவிட்டார்.

இதன்பின் பரலோகத்தில் கடவுள் எல்லோரையும் அணுகி நலம்காண வந்தார். அப்போது அந்தப் பக்தன் இறைவனை வணங்கி "உங்களை அனுதினமும் தரிசித்தேன் இதுவா எனது முடிவு" என்றார். அப்பனே உனக்கு மூன்று சந்தர்ப்பங்களைத் தந்தேன். முதலில் செய்தியை அனுப்பினேன். பின்னர் படகை அனுப்பினேன். இறுதியில் விமானத்தை அனுப்பினேன். நீ ஒன்றையும் பயன்படுத்தவில்லை...நீ மட்டும்தான் என் பக்தனா?.. எத்தனைகோடி பக்தர்கள் உள்ளனர். அவர்கள் எல்லோருக்கும் நான் அருள்பாலிக்க வேண்டும் அல்லவா?.."உனது பிடிவாதத்திற்கு இதுவே முடிவு. நீ இருப்பதைவிட இறத்தலே மேல்" எனக்கூறிச் சென்றுவிட்டார்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திரம் வேண்டாம்.......

இயற்கை அழகு மயக்க வைக்கும் அந்தக் கிராமத்தில் அண்ணன் தம்பி இருவர் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு பூந்தோட்டம் இருந்தது. பூந்தோட்டத்தை அண்ணனுக்குப் பாதி தம்பிக்குப்பாதி எனப் பிரித்துக் கொடுத்திருந்தார் அவர்களுடைய தந்தையார். இருவரும் தினமும் தோட்டத்தில் பூ பறிப்பார்கள். சாயங்காலம் பூ பறித்துவிட்டு, அடுத்தநாள் காலையில் சந்தையில் கொண்டுபோய் விற்பது வழக்கம்.

ஒருநாள் மாலை அவர்கள் இருவரும் தாங்கள் பறித்த பூக்களைத் தனித்தனியே கூடைகளில் வைத்திருந்தனர். இரண்டு பூக்கூடைகளிலும் சமமாக அரைக்கூடை பூக்கள் இருந்தன. தம்பிக்காரன் தான் பறித்த பூக்கள் இருந்த கூடையில் சிறிது தண்ணீர் தெளித்துவிட்டு தூங்கப்போனான். ஆனால் அண்ணனோ பூக்களுக்குத் தண்ணீர் தெளிக்கவில்லை. மறுநாள் காலையில் எழுந்து சந்தைக்குப் போகப் புறப்படும்போது தம்பியின் பூக்கூடையில் பூக்கள் நிரம்பி இருந்ததை அண்ணன் கவனித்தான்.

ஆனால் அவனது பூக்கூடையில் அரைக்கூடை பூக்கள் இருந்தன..இதனால் தம்பிமீது சந்தேகப்பட்ட அண்ணன் "நீ என்னுடைய பூக்கூடையில் உள்ள பூக்களைத் திருடி உன்கூடையில் வைத்துக்கொண்டாய் அதனால்தான் உன்கூடையில் நிரம்பப்பூக்கள் இருக்கின்றன" என ஆத்திரப்பட்டான். உடனே கையில் கிடந்த அரிவாளால் தம்பியை வெட்டினான். பலத்த வெட்டுப்பட்ட தம்பி கீழே விழுந்து துடி துடித்தான். "அண்ணா நான் உன் பூக்களைத் திருடவில்லை நான் இரவில் பூக்களுக்குத் தண்ணீர் தெளித்து வைத்துவிடுவதால் கூடையிலுள்ள மொட்டுக்கள் நன்கு மலர்ந்துவிடும். அதனால்தான் எனக்குப் பூக்கள் அதிகமாக இருக்கின்றன" என்று சொன்னவன் அப்படியே நிலத்தில் விழுந்தான்.

வீட்டுக்குத் திரும்பிய அண்ணன் மறுநாள் பூக்களைப் பறித்துப் பூக்கூடையில் தண்ணீர் தெளித்து வைத்தான். அடுத்தநாள் தம்பி சொன்னது மாதிரி மொட்டுக்கள் மலர்ந்து பூக்கூடை நிரம்பியது. அதன்பிறகுதான் அவன் தவறு செய்ததை உணர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ...குற்றம் செய்யாத என்தம்பியை அவசரப்பட்டு வெட்டி வீழ்த்தி விட்டேனே" என்று கதறி அழுதான் அண்ணன். இக்கதை சொல்லும் நீதி.. "ஆத்திரம் கண்ணை மறைத்துவிடும்" கோபப்படுகிறவனுக்கு புத்தி மத்திமம் என்று சொல்வார்கள். கோபத்தினால் அறிவை இழக்காமல் அகிலத்தினை ஆண்டிடுவோம்!......

செல்வி யோகராசா யாழரசி
ரூத் மிஷன் - கிளிநொச்சி.

## அன்பு!.........

அன்பு என்பது உள்ளத்தில் ஏற்படும் உணர்வாகும். உலகியல் வாழ்வில் மக்கள் உறவுகளிடையே அன்பு செலுத்தி வாழ்கிறார்கள். பெற்றோர் பிள்ளைகளிடம் அன்பு கொள்ளுதல் சகோதரர்களிடையே உருவாகும் அன்பு, பாசப்பிணைப்பு, நண்பர்களிடையிலேயான புரிந்துணர்வு, அன்புகொள்ளல், காதலன்-காதலி ஒருவருக்கொருவர் கொள்ளும் அன்பு இவ்வாறு அன்பு கொள்வது பலவிதமாகக் காணப்படுகின்றது.

அன்பு உலகமகாசக்தி வாய்ந்தது. நாம் இறைவன்மீது கொள்ளும் அன்பு, பக்தி என்போம். இறைவன் பக்தர்களது அன்புக்குக் கட்டுப்படுகிறார். இதனை நாம் புராணக் கதைகளில் இருந்தும் நாயன்மார்களது வரலாறுகளிலிருந்தும் அறிகிறோம். பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர்...."அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு"என்று கூறுகின்றார். உயிருக்கு உடம்போடு பொருந்தியுள்ள உறவு அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அன்பின் வலிமையை வள்ளுவர் அழகாக விளக்கியுள்ளார்.

மகாத்மா காந்தி "அன்பு இருக்கும் இடத்தில் வாழ்வு இருக்கும். எதிரியை அன்பினால் மட்டும் வெற்றிகொள்ள முடியும்" என்று கூறுகின்றார். மனிதர் மாத்திரமன்றி விலங்குகள் பறவைகள் என்பனவும் அன்பைப் பரிமாற்றம் செய்கின்றன. உலகில் உயிர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவது அன்பு என்ற சக்திதான். உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் அன்பு நெறியை வலியுறுத்துகின்றன. "அன்பும் சிவமும் ஒன்றே" என்று திருமந்திரம் கூறுகின்றது. கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை பெற்றவர்கள் அன்பினால் அகிலத்தை வெல்லலாம்!..

செல்வி.வி வைஸ்ணவீகா
தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை - எசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்த திருக்குறள்...தெரியாத விடையங்கள்.....

01-திருக்குறளில் தமிழ், கடவுள் என்ற சொற்கள் பயன்படுத்தப்படவில்லை.

02-திருக்குறளிலுள்ள மொத்த எழுத்துக்கள் 42.194. சொற்கள் 14.000.

03-தமிழிலுள்ள 247 எழுத்துக்களில் 37 எழுத்துக்களில் இடம்பெறவில்லை.

04-திருக்குறளில் இடம்பெற்ற இரு மலர்கள் அனிச்சம், குவளை.

05-திருக்குறளில் இடம்பெற்ற ஒரே பழம் நெருஞ்சிப்பழம்.

06-திருக்குறளில் இடம்பெற்ற ஒரே விதை குன்றிமணி.

07-திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிர் எழுத்து "ஔ"

08-திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து "னி"

09-திருக்குறளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் "ளீ" "ஙு"

10-திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் "9"

11-திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் பனை, மூங்கில்.

12-திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளன.

13-திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்.

14-திருக்குறளின் உரை ஆசிரியர்களில் 10வது ஆசிரியர் பரிமேலழகர்.

15-திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யூ.போப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் பயணம்....

போரினால் சிதைக்கப்பட்டு
சித்தரமாக்கப்பட்டது எம்இதயங்கள்
கொடூர ஆயுதங்களால் குத்தப்பட்டு
பறிக்கப்பட்டது எம் வாழ்வு!...

வாழவேண்டிய வயதில் வாழ்வு
இழந்தநிலையானது எம் வாழ்வு
எதிர்காலக் கனவுகளெல்லாம்
மண்ணாகிப்போனது ஒருநொடியில்!..

துன்பம் என்று போர்வைக்குள்
வேதனைகளை சுமந்து இதயம்
இன்பம் என்ற ஒன்றைத்தேடி
அலைகின்றது எம் வாழ்வு!...

கண்ணீரும் காய்ந்து போக
எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றமாயின
எம் குருதிகளும் உறைந்துபோயின
இருந்தும் எதிர்காலக் கனவுடன்!..

நெஞ்சில் கனவுகள் சுமந்து
இலட்சியங்களை உயிராக்கி
தொடருகின்றது எம் பயணம்
விடிவுவரும் என்றநம்பிக்
கையில்!...

செல்வி.ஸ்ரீ சிந்துஜா
அகிலாண்டேஸ்வரி அருளகம்
வவுனியா

## தாய்....

அன்பைத் தந்தவள்
அரவணைத்துப் பார்த்தவள்
தன் கருவினிலே
குழந்தையாகச் சுமந்தவள்
அவள்தான் அன்னை!...

கருவிற்கு முற்றுப் புள்ளி
வைத்து உலகிற்குவந்த நாளில்
அறியவில்லை தாயே
இவ்வுலகில் எல்லாம்
பொல்லாதது என்பதை!..

வேஷ மனிதர்கள் மத்தியில்
வாழப்போவதை எண்ணி
நீ தினமும் கண்ணீர் வடிப்பதை
உணரவில்லைத் தாயே
இன்று உணருகின்றேன்
நீ அருகில் இல்லையே!...

போய் வருகிறேன் என்றாய்
சொன்னதைப் போல வந்தாய்
உயிர்தந்தநீ உயிரற்ற ஜீவனாய்
அன்று உணர்ந்துகொண்டேன்
தாயில்லாத "அநாதை" என்று!...

உன்னைப் போல் உறவு
யாரும் எனக்கில்லை
உன்னைவிட இழப்பு எதுவுமில்லை
உன்நினைவுகள் அழியாத சுவடுகள்

செல்வி ஜெ மேரிகிபில்டா
அகிலாண்டேஸ்வரி அருளகம்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 12

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | | | 2 | 3 |
| 7 | | | | | | | 9 | 1 |
| | | 1 | 7 | 9 | | | 8 | 6 |
| | 3 | 4 | | | | | | |
| 9 | | | | | | 8 | | |
| 2 | | | 3 | 7 | | | 1 | |
| | | | | 2 | 3 | 1 | 4 | |
| | 2 | 6 | | | 5 | | 7 | |
| | | 3 | | | | 9 | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 103
## (கார்த்திகை--மார்கழி -2018)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 கிறிஸ்தவ மக்களின் கொண்டாட்டம்.

10-11 வீடு கட்டப் பயன்படும்.

வ – இ:

10-09 ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஒரு இது உண்டு.

16-13 சில மாணவர்கள் இது எழுதுவதில் வல்லவர்கள்.

கீ – மே:

10-06 திருவள்ளுவர் கல்வியை இந்த உறுப்புக்கு ஒப்பிட்டுள்ளார்.

16- 04 மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று.

மே – கீ:

01- 09 ஊர்வன ஒன்று.

03 -07 ஆண்களுக்கு இது உண்டு பெண்களுக்கு இது இல்லை.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு.......



தேவாதி தேவனின் அன்பு
அன்பு தெய்வீகம் தோன்றிடும் அன்பு
இயேசுவின் இரக்கத்தில் பிறந்தது அன்பு
இரத்தத்தால் இரட்சித்துக் காத்த அன்பு
மரியாளின் மடியில் பிறந்த அன்பு
மானிடம் தளைக்கவே மலர்ந்த அன்பு
கர்த்தரின் கிருபையில் கனிந்த அன்பு
காலமெல்லாம் எம்மைக் காக்கும் அன்பு
பாசத்தில் பணிந்திங்கு உதித்த அன்பு
பாவத்தைப் போக்கவே துணிந்த அன்பு
ஆண்டவன் ஆவியில் மலர்ந்த அன்பு
அனைவர்க்கும் ஆதாரம் ஆன அன்பு
உன்னத தேவனின் உயர்ந்த அன்பு
உள்ளத்தில் கிறிஸ்த்துவாய் உறைந்த அன்பு
வானத்தின் வழியாக வந்த அன்பு
வாழ்த்துக்கள் வழங்கியே நின்ற அன்பு

## புத்த பெருமானின் நல்மொழிகள்

-பேசியே தீருங்கள் பேசியே வளர்க்காதீர்கள்....

-நடப்பதைப் பாருங்கள் நடந்ததைக் கிளறாதீர்கள்....

-உரியவர்களிடம் சொல்லுங்கள் ஊரெல்லாம் சொல்லாதீர்கள்....

-உறுதி காட்டுங்கள் பிடிவாதம் பிடிக்காதீர்கள்....

-விவரங்கள் சொல்லுங்கள் வீண் வார்த்தைகள் சொல்லாதீர்கள்....

-தீர்வை விரும்புங்கள் தர்க்கத்தை விரும்பாதீர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் அறிவோம்.......

ஆசிரியர்:-

ஆசிரியர் என்பது நல்ல தூய இனிய தனித்தமிழ்ச் சொல்லாகும். ஆசு என்பதற்குக் குற்றம் என்பது பொருள் இரியர் என்பதற்கு நீக்குபவர் என்பது பொருள். ஆம் ஆசிரியர் குற்றம் களைபவர் - நீக்குபவர் ஆவார்.

மையம்:-

இதன் பொருள் நடுப்பகுதி என்பதாகும். முதலுக்கும் முடிவுக்கும் இடைப்பட்ட, நடுப்பட்ட பகுதி மையம் எனப்படும். இது மத்திமம் என்னும் வட சொல்லின் தமிழ்த்திரிபாக எண்ணப்படுகிறது. காலையும் இல்லாமல், மாலையும் இல்லாமல் நடுநேரம் - மைய நேரம் மதியம் ஆயிற்று. ஆம் மத்திமமே மதியம் ஆயிற்று.

வாகை:-

வாகை என்பதற்கு வெற்றி என்பது பொருளாகும். இதன் செம்மையான பொருள் மற்றும் சொல் வாய்கை - வாய்த்தல் - வாய்க்கப் பெறுதல் என்பனவாகும். இந்தச் சொற்களின் சுருக்கமே -மருவே - திரிபே வாகை ஆனது. (வாய்கை - வாகை)

விழுது:-

ஆலமரத்தின் கிளைகளாகக் கீழே விழுந்து தொங்குவது விழுது எனப்பட்டது. காரணம் அந்த வேர்களான விழுதுகள் கீழ் நோக்கி - மண் நோக்கி- பூமியை நோக்கி - தரையை நோக்கி விழுந்து வருவதால் அது விழு- விழுது ஆயிற்று. மேலும் தரையின் மண்ணைப் பிளந்து வீழ்த்துவதாலும் அது வீழ்த்து - விழுது ஆயிற்று.

வீம்பு:-

கர்வம், பிடிவாதம், அடாவடித்தனம் என்னும் பொருளில் வழங்கும் சொல்லே வீம்பு ஆயிற்று. வீண்புஉரை -வீண்புரை - வீம்புரை - வீம்பு ஆயிற்று. வீண் - வேண்டாத, தேவையில்லாத, அர்த்தமற்ற, உரை - பேச்சு, வார்த்தை, சொல். இந்த வீண்புரையே வீம்பும் ஆயிற்று.

மு.குப்புலிங்கம்
தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு!...

மன்னர் அசோகர் ஒரு முறை வேட்டைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிரில் ஞானத்துறவி ஒருவர் வந்து கொண்டிருந்தார்.. மன்னரும் அவரது ஆட்களும் செல்ல வழிவிட்டு, ஓர் ஓரமாகத்துறவி ஒதுங்கி நின்றார். அசோகச் சக்கரவர்த்தி அவரைப் பார்த்து விட்டார்.உடனே தமது ரதத்தை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று துறவியின் காலில் நெடுஞ்சாண கிடையாக விழுந்து வணங்கினார்..

அவரது சிரம் (தலை) துறவியின் காலில் பட்டது. துறவி தமது கைகளை உயர்த்தி மன்னனை ஆசிர்வதித்தார்.. இதைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் சங்கடப்பட்டார் ஒரு மன்னன் ஒரு பரதேசியின் காலில் விழுவதா? அரச பாரம்பரியக் கவுரவம் என்னாவது? என்ற எண்ணம் அவரை அலைக் கழித்தது. அரண்மனைக்கு சென்றதும்.. அரசரிடம் தமது வருத்தத்தை வெளிப்படுத்தினார். அமைச்சரின் பேச்சைக் கேட்ட அசோக மன்னர் சிரித்தார்.

அமைச்சரின் கேள்விக்குப் பதிலளிக்காமல்,ஒரு விசித்திர கட்டளையைப் பிறப்பித்தார் ஒரு ஆட்டுத் தலை, ஒரு புலித்தலை, ஒரு மனிதத் தலை, மூன்றும் எனக்கு உடனே வேண்டும் ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே, என்றார். மன்னரின் கட்டளை அமைச்சரைத் திகைக்க வைத்தது.. எனினும் அரச கட்டளையாயிற்றே! அதை நிறைவேற்ற ஏவலர்கள் நாலாபக்கமும் பறந்தனர்..ஆட்டுத்தலை கிடைப்பதற்கு அதிகச் சிரமம் இருக்கவில்லை. ஓர் இறைச்சிக் கடையில் அது கிடைத்து விட்டது. புலித் தலைக்கு அலைந்தனர். அது ஒரு வேட்டைக்காரனிடம் கிடைத்தது. அன்றுதான் அவன் ஒரு புலியை வேட்டையாடியிருந்தான்.

மனிதத் தலைக்கு எங்கே போவது? கடைசியில் சுடுகாட்டிற்குச் சென்று ஒரு பிணத்தின் தலையை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தனர்..மூன்றையும் பார்த்த அசோக மன்னர் தன் அமைச்சரிடம், இம்மூன்றையும் சந்தையில் விற்று வாருங்கள்." என்றார். மன்னரின் கட்டளைப்படி சந்தைக்குச் சென்றவன் திணறினான். ஆட்டுத் தலை அதிகச் சிரமமின்றி விலை போனது. புலியின் தலையை வாங்க ஆளில்லை. பலர் அதை வேடிக்கை தான் பார்த்தனர். கடைசியில் ஒரு வேட்டைப் பிரியர் அதனை தன் வீட்டில் அலங்காரமாக மாட்டி வைக்க வாங்கிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்தலையைப் பார்த்த கூட்டம் அருவருப்புடன் அரண்டு மிரண்டு பின் வாங்கியது. ஒரு காசுக்கு கூட அதை வாங்க யாரும் முன்வரவில்லை.. அரண்மனை திரும்பிய அமைச்சர் ஆட்டுத் தலை உடனே விலை போனதையும், புலித்தலை சற்றுச் சிரமத்துடன் விலை போனதையும், மனிதத் தலையை வாங்க ஆளில்லை. என்பதையும் தெரிவித்தார். அப்படியானால் அதை யாருக்காவது இலவசமாகக் கொடுத்து விடுங்கள்!"என்றார் அசோகர். இலவசமாகக் கூட அதனை வாங்கிக் கொள்ள யாருமே முன்வரவில்லை.

இப்போது அசோக மன்னர் கூறினார்... பார்த்தீரா அமைச்சரே! மனிதனின் உயிர் போய்விட்டால், இந்த உடம்பு கால் காசுகூடப் பெறாது.இலவசமாகக் கூட இதனை யாரும் தொடமாட்டார்கள். இருந்தும் இந்த உடம்பு உயிர் உள்ள போது என்ன ஆட்டம் ஆடுகிறது! செத்த பின்பு நமக்கு மதிப்பில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், உடலில் உயிர் இருக்கும்போது, தம்மிடம் எதுவும் இல்லை என்று உணர்ந்தவர்கள் தான் ஞானிகள்.அத்தகைய ஞானிகளை விழுந்து வணங்குவதில் என்ன தவறு? சொல்லப்போனால் அதுதான் ஞான வாயிலின் முதல் படி! என்றார். தன் தவறை உணர்ந்தார் அமைச்சர்..பணிந்தவர்களும், துணிந்தவர்களும் வாழ்வில் தோற்றதாக வரலாறு இல்லை.

படித்துச் சுவைத்தவர்:- இந்து - யேர்மனி.

---

ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!.......

பிறப்பு - அடுத்தவர் கொடுத்தது.
பெயர் - அடுத்தவர் வைப்பது.
கல்வி - அடுத்தவர் தந்தது.
வருமானம் - அடுத்தவர் அளிப்பது.
முதல் மற்றும் கடைசிக் குளியல் - அடுத்தவர் செய்வது.
இறப்பின் பின்பு சொத்துக்கள் - அடுத்தவர் எடுப்பது.
இறுதிச் சடங்கு - அடுத்தவர் செய்வது.

இப்படி எல்லாமே நாம் அடுத்தவர் துணையோடு இருக்கும்போது, எதற்கு இந்தக் கோபமும், பொறாமையும், போட்டியும், ஆசையும், வேறுபாடுகளும், அடாவடித்தனங்களும், பதவி மோகங்களும் நிறுத்தி ஒரு நிமிடம் சிந்திப்போம்!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

அவாவறுத்தல்: –

361. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்டா வரும்.

363. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீட்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

364. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்டா வரும்.

365. அற்றவ ரென்பா ரவாவற்றா மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

366. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

367. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

368. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம் துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

369. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

370. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

(ஆசையை விடுதல்)

361. எல்லா உயிர்க்கும் எக்காலத்துக்கும் அழியாமல் வருகின்ற பிறவியைக் கொடுக்கும் விதை ஆசையே ஆகும்.

362. பிறவாது இருப்பதையே ஒருவன் வேண்டிக்கொள்வான். அப்பிறவாமை எப்பொருளையும் விரும்பாதவனிடம் தானே வரும்.

363. ஒரு பொருளை விரும்பாமையைப் போன்ற செல்வம் இவ்வுலகிலும் இல்லை. தேவர் உலகிலும் அதர்க்கு நிகரில்லை.

364. மனத்தூய்மை என்பது ஆசை இல்லாமை. அது உண்மை பேசுவதனால் தானே உண்டாகும்.

365. பிறவி அற்றவர் என்பவர் ஆசை அற்றவரே மற்றையவர் பற்று அறாது உலகியலில் பிறவி உடையவர்களே ஆவர்.

366. ஆசையே மக்களை வஞ்சிப்பது. அதற்கு அஞ்சி நடப்பதே துறவறம் ஆகும்.

367. ஆசையை முழுவதும் ஒருவன் நீக்கினால் அவன் கெடாமைக்குக் காரணமான நல்வினை விரும்பும் வழியில் வந்துசேரும்.

368. ஆசை அற்றவருக்குத் துன்பம் இருக்காது. ஆசை உண்டாகுமானால் துன்பம் மேலும் மேலும் வந்து சேரும்.

369. ஆசை என்னும் துன்பத்தை ஒழித்து விட்டால் இன்பம் இடைவிடாமல் பெருகிவரும்.

370. ஒரு வகையிலும் நிறைவு பெறாத ஆசையை மனதிலிருந்து நீக்கிவிட்டால் அழியாத நிலையான இயல்பை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## தளிர்ப்பு:-

இலையுதிர்காலம். மரம் மொட்டையாக நின்றது. புல் மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின. "உன் இலைகள் விழுந்துகொண்டிருக்கின்றன உன்னைப் பார்த்து அழவேண்டும் போலிருக்கின்றது." என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது. மரம் சொன்னது "நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும்" நிமிர்ந்தே நின்றது மரம் . அது சொன்னது...

"விழுவதற்கெல்லாம் அழுவதற்கில்லை"

## இயக்கம்:-

இரவு. கடலில் வந்துகொண்டிருந்த படகுகளில் ஒன்று மற்றதைப் பார்த்துக் கேட்டது. "அதோ கடற்கரையில் தன்னந்தனியாக நின்று ஒளிவீசும் கலங்கரை விளக்கத்தை பற்றி நீ என்ன நினைக்கிறாய்"? "தெரியல்லையே என்றது இரண்டாம் படகு" முதல் படகு சொன்னது.."கூட்டமாகத்தான் பணியாற்றலாம் என்பதில்லை. தன்னந்தனியாகக்கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு அது கூறவில்லையா?..வார்த்தைகளை அது நறுக்கி வைத்தது.

"தனி என்றிருப்பினும் பணி என்றிரு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினா விடைகள்...

01-தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது? - கங்காரு எலி

02-ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன? - ஏழு

03-பிறக்கும்போதுகுழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள்இருக்கும்? 330

04-உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது? - நெதர்லாந்து

05-நாய்கள் இல்லாத ஊர் எது? - சிங்கப்பூர்

06-தாஜ்மஹால் எந்தவகை மாபிளால் கட்டப்பட்டுள்ளது? - மக்ரானா

07-நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன? - ஆறு தசைகள்

08-கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி? - வௌவால்

09-உலகிலேயே பெண் எம்.பிக்கள் அதிகம் உள்ள நாடு எது? - ஸ்வீடன்

10-நின்று கொண்டு தூங்கும் பிராணி எது ? - குதிரை

11-உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன? -12,500

12-புயல் பற்றிய எச்சரிக்கை கொடுக்கத் துவங்கிய ஆண்டு ? - 1886

13-மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் ஆறு ? - ஹோவாங்கோ ஆறு

14-உலகில் மிக அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் நாடு எது ? - இந்தோனேசியா

15-மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடுஎது? - தென்னாப்பிரிக்கா

16-உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடி கொண்ட நாடு எது? - டென்மார்க்

17-காவல் துறையில் முதன்முதலில் பெண்களைச் சேர்த்த நாடு எது? - பிரிட்டன்

18-கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது ? - இங்கிலாந்து

19-இந்தியாவையும்இலங்கையும் பிரிக்கும் நீர்ச்சந்து எது? - பாக் நீர்ச்சந்தி

20-எவரெஸ்ட் சிகரத்தின்உயரம் என்ன? - 8848 மீட்டர்கள்

21-எகிப்து நாகரீகம்தோன்றிய நதிக்கரை எது? - நைல் நதி

22-அணுக் கொள்கையைஉருவாக்கியவர் யார்? - ஜான் டால்டன் (john daltan)

23-தையல் இயந்திரத்தைகண்டுபிடித்தவர் யார்? - ஐசக் சிங்கர்
தேசியக் கொடியில்சூரியன் வைத்துள்ள நாடுகள் எவை? அர்ஜெண்டினா மற்றும் உருகுவே

24-இயேசு கிறிஸ்துவின்தாய் மொழி என்ன? - அராமைக் (Aramaic)

25-உலகின் மிகப்பெரிய நன்னீர் தீவு எது? - மாஜூலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-166
## (கார்த்திகை-மார்கழி -2018)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-04 உலக கிறிஸ்தவர்களின் கொண்டாட்டம்.

11-13 சிலர் இது வேண்டியும் பிழைப்பார்கள்.

29-31 தமிழர்களின் சொத்தாகக் கருதப்படுவது (கு)

38-41 ஆண்டு என்பதன் ஒத்தசொல்.

46-49 திருடி எதிர்பாற் சொல் இது.

வ-இ

07-04 இலங்கையில் பெரும்பான்மைச் சமூகத்தினர் இவரை வழிபடுவர்.

10-08 இலங்கையில் இதையும் சிலர் கொள்ளையடிக்கிறார்கள்.

21-19 இனிப்பான தின்பண்டம்.

27-26 சில மனிதரின் குணத்தை இந்த மிருகத்திற்கு ஒப்பிடுவார்கள்.

34-31 நான்குபக்கத்தாலும் வரும் செய்திகளை இப்படியும் அழைக்கலாம்.

கீ.மே

38-17 கீரை வகை மரக்கறி.

43-22 வருடத்தில் ஒரு மாதம்.

45-31 நம் நாட்டில் இனிப்பான பழம்தரும் மரம் ஒன்று.

46-04 எல்லா மதத்தவர்களுக்கும் பொருத்தமான நூலை எழுதியவர்.

மே-கீ

01-22 அவ்வையார் அருளிய நூல் ஒன்று.

03-17 நம் நாட்டுப் பூ வகை ஒன்று.

07-42 மரக்கறிவகைகளில் ஒன்று.

16-30 இதையும் சந்தித்தால்தான் வாழ்வில் வெற்றி பெறலாம்.

30-44 சின்னத்திரை நாடகங்களில் இந்தப்பாத்தித்திற்குக் குறைவில்லை.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்நெறியில் மருத்துவம்.....

(நல்நெறி வீ.நந்தகுமார்-யேர்மனி)

01-துளசிச்சாறு : இருமல், ஈரல், செமிபாட்டு நோய்கள் நீக்கி இரத்தம் சுத்தமாக்கும்.

02-கறிவேப்பிலை : பேதி, ஈரல் கோளாறுகள், தைராய்ட்டு, அகற்றி பித்தம் குணமாக்கும்.

03-தூதுவளை : சளி, நரம்புத் தளர்ச்சி, காதுமந்தம் நீக்கி, நினைவாற்றல் பெருக்கும்.

04-கொத்தமல்லி : மூலம், வாதம், இருமல், நரம்புத் தளர்ச்சியை நீக்கி, பசியைத் தூண்டும்.

05-குப்பைமேனி : தோல் வியாதிகள், மூட்டுவாதம், மூலவியாதி, குடற்பூச்சிகளை நீக்கும்.

06-பசளைக்கீரை : இரத்த சுத்தி செய்யும், கண்ணுக்கு நல்லது, சகல சத்தும் உள்ளது.

07-அறக்கீரை : நோய்களை எதிர்க்கும் சக்தியுள்ளது, உடலை வெப்பமாக வைத்திருக்கும்.

08-அகத்திக்கீரை : மருந்துடன் கலக்கக் கூடாது, சத்துள்ளது, தினமும் பாவிக்கக் கூடாது.

09-முருங்கைக்கீரை : கண்பார்வை தெளிவாகும், தாது விருத்தி உண்டாகும், வாய்வு நீங்கும்.

10-கற்பூரவள்ளி : சளி வருத்தம், இரத்த அடைப்பு, நாள அடைப்புக்கள் நீங்கும்.

11-காளான் : அற்புதமான மருந்துண்டு, புரதச் சத்துள்ளது, புற்று நோய்களைத் தடுக்கும்.

12-அன்னாசி : வயிற்றுப் புண் மாறும், கிருமி நீக்கும், கண் நோய் நீங்கும்.

13-இளநீர் : புரதம், பொட்டாசியம், மக்னீசியம், சத்துள்ளது, புத்துணர்ச்சி ஊட்டும்.


14-மோர், வெந்தயம் : இரத்தம் சுத்தமாகும், அல்சர், வயிற்று நோ குணமாகும்.

15-மாதுளம்பழம், தேன் : வயிற்றோட்டம், களைப்பு நீங்கும், கண்பார்வை வெளிக்கும்.

16-தயிர் : கல்சியம் நிறைய உள்ளது, மூளையைக் குளிர்ச்சியாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் பிறப்புவிழா..



உலக வரலாற்றின் மையமாக விளங்குபவர் இயேசுபெருமான். இதனை கி.பி, கி.மு என்றும் காலவரையறை எடுத்துக் காட்டுகிறது. இவ்வரையறை ஒன்றே உலக வரலாற்றில் அவரின் முக்கியத்துவத்தை உணர்த்தப் போதுமானது. உரோமப் பேரரசு அகஸ்து சீசரின் ஆட்சிக்குள் பலஸ்தீன நாடு உட்பட்டிருந்த காலத்தில் பெத்தலேகம் என்னும் சிற்றூரில் பிறந்த இயேசு கத்தோலிக்க கிறிஸ்தவ உலகம் இறைவனின் அவதாரம் எனக்கும்பிடுகிறது. ஏனையோர் அவரை ஒரு மகாத்மாவாக ஞானியாக மதித்து மரியாதை செய்து வருகின்றனர். கிறிஸ்து பிறப்புவிழா கடவுளின் திருமகன் இயேசு இவ்வுலகத்திற்கு ஒரு பாலனாக மார்கழி 25ம் திகதி நடுநிசியில் வந்தவிழா. அன்னை மரியாளுக்கும் சூசையப்பருக்கும் மகனாகப் பிறந்தவர் வானதூதர் இடையருக்கு நற்செய்தி அறிவித்தபோது "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணியில் சுற்றி தீவணத்தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்" என்றனர். கடவுள் தம்மைத் தனது மகன் இயேசு வழியாகக் கொடையாக் குக ் ன்றார். ஒவ்வொரு ஆண்டின் கிறிஸ்து பிறப்புவிழா " இறை மனித உறவு புதுப்பித்தலின் தினமே. இயேசுவின் மானிட வாழ்வு ஒரு புதிய பரிமாணம் பெறுகிறது. ஏழைகள் வாழ்வு மலர்கிறது.

பாவிகள் வாழ்வில் நம்பிக்கை பிறக்கிறது. அடிமைத்தளைகள் ஒடுக்கப் படுகின்றன. அனைவருக்கும் விடுதலை கிடைக்கின்றது. இன்றைய கிறிஸ்மஸ்விழா கிறிஸ்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல உலகமே கொண்டாடி மகிழ்கிறது. இது மனுக்குலத்தின் விழா மானுடம் தெய்வநிலை பெற்றதினவிழா. அனைவரும் மீட்பும் அமைதியும், பகிர்வும் கிடைக்கும்விழா. இன்று கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தமற்ற முறையிலும் பலர் கொண்டாடுகின்றனர். கிறிஸ்து பிறப்பின் பொருள் என்னவென்று சிந்திக்கவேண்டிய நிலையுள்ளது.

புத்தாடைகள் உடுத்துவதும் பரிசுப்பொருட்களை அதிகவிலை கொடுத்து வாங்கிப் பரிமாறுவதும், நன்றாகச் செலவழித்து குடிவகை உணவுகள் தயாரிப்பதும், வீடுகள், வர்த்தக நிலையங்களில் மின்விளக்குகளால் அலங்காரம் செய்வதுதான் தற்போது முதன்மையாக விளங்குகின்றது. எல்லாம் நல்லதுதான். ஆனால் கிறிஸ்து நமது மத்தியில் பிறந்துவிட்டார். அவரை மறுபடியும் பிறக்க வைப்பது இவ்விழாவின் முக்கிய காரணமாகும். அதாவது ஒவ்வொரு நாளும் அவர் எம்மத்தியில் பிறக்க வேண்டும். வறியோர், வசதியற்றோர், வாழ்வில் நிம்மதியற்றோர், நோயினால் துன்பப்படுவோர், சிறைச்சாலைகளில் சிறைப்பட்டிருப்போர் எண்ணங்களில் அவர் பிறக்க வேண்டும்.

ஏனெனில் ஏழைகள் வடிவில் இறைவன் வருகின்றார். இச்சிறியோருக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள். சிறையில் இருந்தேன் தரிசிக்க வந்தீர்கள். பசியாய் இருந்தேன் உணவு தந்தீர்கள். ஆடையின்றி இருந்தேன் ஆடை தந்தீர்கள் என்பது இயேசுவின் வாக்கு. இயேசு மனித உலகின் விளிம்பிலுள்ளோரோடு தன்னை இணைத்துக் கொண்டவர். மனித துன்பம் கண்டு மனம் வருந்துபவர் அவர். ஏழைகளின் கண்ணீர் துடைப்பவர்தான். இன்று அவரது பிறப்பு. நீதி கிடைக்காதோருக்கு நீதி கிடைக்கப் போராடுவது இயேசு பிறப்பின் பொருளை நமக்கு நடைமுறைப் படுத்துகின்றது.

நல்லோரின் நற்செயல்கள் வாயிலாகக் கிறிஸ்து பிறப்பு ஒவ்வொரு நாளும் நடந்தேறுகின்றது. உங்களில் கிறிஸ்து ஒவ்வொரு நாளும் பிறக்கவேண்டுமாயின் ஒரு நல்ல செயல் செய்வது நல்லதே. உம்மில் கிறிஸ்து பிறக்கின்றார் என்றால் நீ கிறிஸ்து பிறக்கின்றார் என்றால் நீ கிறிஸ்துவாய் இன்னொருவரில் பிறப்பாய்!........

திருமதி ஜெயா நடேசன்
யோர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளித் திருநாள் (தீபாவளி )



தீபாவளிக்கு இன்னும் ஒரு பெயர் உண்டு தீப ஒளித் திருநாள் என்று, நாம் பட்டாசு கொழுத்தி காசை கரியாக்காமல் அந்தப் பணத்தை ஏழைகட்கு உணவாக கொடுத்தால் பல உயிர்கள் பசி ஆறி மனம் நிறைய எங்களை வாழ்த்தக்கூடும்.
தீப ஒளித் திருநாள் அன்று விளக்குகளை அதாவது தீபங்களை ஏற்றி இல்லங்களில் இருளை போக்குவது போலே நமது மனதிலுள்ள தீய சிந்தனைகளையும் இருளையும் நீக்கி அன்பு என்னும் விளக்கை ஏற்றி இதயத்தில் ஒளி ஏற்றி மன இருளை அகற்ற வேண்டும் என்பதே தீப ஒளித் திருநாளின் விளக்கமாகும்
புதிய ஆடை உடுத்துவதாலோ பட்டாசு கொழுத்துவதாலோ விருந்துண்பதாலோ மட்டும் நாம் உண்மையான மகிழ்வை பெற முடியாது மனதிலுள்ள இருள் களைந்து ஒளி பிறக்குமாகில் அதுவே உண்மையான மகிழ்ச்சியாகும். மனதாலே நாம் இறைவனை நினைந்து மனதிலே மண்டிக் கிடக்கும் தீய சிந்தளைகளையும் துயரங்களையும் இறை அருள் கொண்டு ஞான ஒளியைப் பெற்று விலக்குவோமாகில் அதுவே இனிய தீபத் திருநாள் ஆகும்
இந்து மதத்தவர்கள் மட்டுமின்றி இந்தத் திருநாளில் வேறு மதத்தவர்களும் கொண்டாடுகிறார்கள் வேறு சில காரணங்களுக்காக. நரகாசூரன் என்னும் அரக்கனை நரசிம்ம அவதாரம் எடுத்து விஸ்னு கொன்று அவனது ஆட்சியில் அவதியுற்ற மக்களுக்கு விடுதலை கிடைத்த நாளே இந்த தீபாவளி நாளாகக் கொண்டாடப்படுகிறது.
இறக்கும் தருவாயில் நரகாசூரன் கேட்டுக்கொண்ட வரமானது, அதாவது தான் இறந்த நாளை மக்கள் பெரிய விழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட வேணும் என்பது அவனது இறுதி ஆசையாக இருந்ததால் ஒவ்வொரு ஆண்டும் அவனது இறந்த நாளை இந்துக்கள் பெரு விழாவாகவே கொண்டாடி வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு எங்கும் தீபம் எற்றி இருளைப் போக்கி பட்டாசுகளை வெடித்து புத்தாடை உடுத்தி அயலவர் மற்றும் உறவினர்கள் ஒன்று கூடி விருந்துண்டு மகிழும் நாளாக தீபாவளித் திருநாள் அமைகிறது,
இந்தப் பண்டிகை ஐப்பசி மாதத்தில் வருகிறது. தீபாவளி அன்று அதிகாலை எழுந்து எண்ணை தேய்த்து குளித்து, புத்தாடை அணிந்து, ஆலயங்களுக்குச் சென்று வந்து அதன்பின்னர் உறவுகளுடன் கூடி பரிசுகள் வழங்கி, இனிப்பான பலகாரம் மற்றும் விருந்து உண்டு களிப்பதில் ஒரு பேரானந்தம் உண்டு.தீபங்களை ஏற்றி வீட்டில் உள்ள இருளை போக்குவது மட்டுமின்றி எங்கள் மனதிலுள்ள இருளை போக்க இறைவனைத் துதித்து இன்னாளை இனிய நாளாக கொண்டாடுவதே இந்தப் பண்டிக்கையின் புனிதமாகும்.
நரகாசூரன் என்னும் அரக்கன் மக்களை கொடுமைப் படுத்தியதால்தான் அவனை இறைவன் கொன்றதாக சரித்திரம் கூறுகிறது, ஆனால் இன்றும் அவன் உங்கள் மனங்களில் கொடுமை செய்தவண்ணமே இருக்கின்றான். உங்கள் மனதை ஆட்டிப் படைக்கும் தீய சக்தியாக அந்தத் தீய சக்தியை அழிக்க முடிந்தால் நீங்கள் நிரந்தரமான மகிழ்வை பெறுவீர்கள்.
அதற்குத் தேவை மனச்சுத்தி, பொறாமை, பேராசை, கடும்கோபம், கொடுமையான வார்த்தைகள் இந்த நான்கையும் துறப்பவன் மனச்சுத்தி அடைகிறான். தீப ஒளித் திருநாள் தினத்தில் தீப ஒளி விளக்கில் நமது மனமும் இறைவனை நினைந்து ஓம் என்னும் மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம் மனச்சுத்தியைப் பெற்று மன இருளை நீங்க முயல்வோமாக!

கவி மீனா

---

## பொன்மொழிகள்:-

நேற்றைய பொழுதும் நிஜமில்லை
நாளைய பொழுதும் நிஜமில்லை
இன்றைக்கு மட்டுமே நம் கையில்!....

சண்டைக்குப் பின்வரும் சமாதானத்தைவிட - என்றும்
சண்டையே இல்லாத சமாதானம்தான் வேண்டும்!...

எல்லோரும் தம்மை விட்டுவிட்டு - வேறு
யாரையோ சீர்திருத்த முயல்கிறார்கள்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மனித உரிமைகள் தினம்!.....

(கீத்தா பரமானந்தன்-யேர்மனி)

மனித உரிமை என்பது யாராலும், யாருக்கும் வழங்கப்படுவதல்ல. மனிதர்கள் மனிதராய்ப் பிறக்கும் போதே அவர்களுக்குக் கிடைத்த விட்டுக்கொடுக்கமுடியாத, மறுக்கமுடியாத, உணர்வுகளும் உரிமைகளுமே மனித உரிமையெனப்படுகிறது. சாதி, மதம், பால், இனம் என்பவற்றிற்கு அப்பாலும், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொதிந்திருக்கக் கூடிய பிறப்புரிமைகளையும், கண்ணியத் திற்கும், சுதந்திரத்திற்கும், இன்றியமை யாததும், அவசியமானதுமான உரிமைகளை மனித உரிமை என்கிறோம். அனைத்து மனித உரிமைகளும் சமமான முக்கியத்து வத்தையே கொண்டிருக்கிறது. மனித உரிமைகளின் வரலாறு பல ஆயிரம் ஆண்டுகளை உள்ளடக்கியது. பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக் காலம் முழுவதிலும், சமயபண்பாடு, மெய்யியற்சட்டம் என்பவற்றின் வளர்ச்சியால் வளம்பெற்றுள்ளது.ஐந்து தசாப்த காலமாக உலகம் முழுவதும் மனித உரிமைகள் முக்கியத்துவமாக கருதப்பட்டுவருகின்றன.

ஆயுதப்போர்களில் ஈடுபடும் தனிமனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமாகவே மனித உரிமை பேசப்பட்டது, முதலாம் இரண்டாம் போர்களின் பின் ஏற்பட்ட அனர்த்தங்களும் நாசிக்கொள்கைகளின் அழிவுகளும், அட்டூழியங்களும் , மனிதஉரிமைகள் பற்றிய கொள்கையில் அடிப்படைத் தாக்கத்தை ஏற்படுத்தியது. மனித உரிமை மீறல்களை மிக உறுதிப்பாடான விதத்தில் கண்காணிப்பதற்கான அவசியமும், அவசரமும் ஏற்பட்டது, இரண்டாம் உலகயுத்தத்தின் முடிவானது சர்வதேச மட்டத்தில் பல மாற்றங்களுக்கு வித்திட்டது.

ஐரோப்பாவின் காலனித்துவ அரசியல் வீழ்ச்சி, அரசியல் பொருளாதார ரீதியான விடுதலை கோரிய பல நாடுகளின் விடுதலைக்கு வழிகோலியது. அடுத்ததாக ஐக்கிய நாடுகளினதும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் தோற்றமுமாகும். இச் சபையின் முக்கிய நோக்கமாக சர்வதேச சமாதானம் பாதுகாப்பு என்பவை இருந்தபோதும், மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரத்தையும் பேணுதல் என்னும் நோக்கமுமே மனித உரிமைகள் சம்பந்தமான பிரகடனத்தை உருவாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942ல் 26 நாடுகள் சேர்ந்து மனித உரிமை சாசனம் இடுகையிடப்பட்டு, 1945 யூனில் கைச்சாத்திடப்பட்டது .குறிப்பிடப்பட்ட சாசனத்தில் ஐ.நா.-சபை உரிமைகளை வரையறுக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, 1946 யூன், ஐ.நா.- பொருளாதார-, சமூகசபை-, தேசிய- மற்றும் அரசியல்பின்னணியைக் கொண்டு 18 உறுப்பினர்கள் கொண்ட மனித உரிமை ஆணையத்தை நிறுவியது.

1948ம் ஆண்டு 48 நாடுகள் வாக்களித்து, எந்த நாடும் எதிர்த்து வாக்களிக்காமல் சாசனத்தை ஏற்றுக்கொண்டன, உலகளாவிய பிரகடனத்தின் ஏற்பு, டிசம்பர் பத்து, குறிப்பிடவேண்டிய சர்வதேச நினைவுச் சின்னமாகும். இதுவே மனித உரிமை தினமாக அறிவிக்கப்பட்டது. பிரகடனம் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, டிசம்பர் பத்தில் நோபல் பட்டமளிப்பு நிகழ்வை பெரும் பிரச்சாரங்களோடு நடத்தினாலும், இன்றுவரை மனித உரிமைகள் முக்கிய இடங்களில் மதிக்கப்படுவதில்லை என்பதே யதார்த்தம்.

இதன்பின்னரும் பல சர்ச்சைகளுக்கூடாக, ஒப்புதல்களோடு, 1976ல் மனித உரிமைகளைப் பேணுவதற்காக மேலும் பல ஒப்பந்தங்களும் நிறைவேற்றப்பட்டன. சிறுவர்-, பெண்- உரிமைகள், பெண்களுக் கெதிரான ஓரங்கட்டலைத் தடுக்கும் உரிமைகள், தொழிலாளர்-, அகதிகள்-, சுற்றாடல்பாதுகாப்பு உரிமைகள், தனித்தனியாக அங்கீகரிக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் மனிதன் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை அனுபவித்து வந்தான். காலம் செல்லச்செல்ல மக்கட்தொகை வளர்ச்சியினால் வளங்கள் அருகத் தொடங்கியதால், மனிதன் அனுபவித்து வந்த உரிமைகளை அனுபவிப்பதில் தடைகளும், இடையூறுகளும் ஏற்பட்டது.

இதனால் மனிதன் மனிதனாக வாழ்வதற்கான அடிப்படைத் தேவை எதுவென வரையறுக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கான உரிமைகள் அனைத்தையும் மனித உரிமை என்றபோதும் . உயிர் வாழ்வதற்கான உரிமைகள், கருத்துச்சுதந்திரம் என்பவை சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையாக இருந்தாலும் அது மற்றவரது செயற்பாடுகளைப் பாதிக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

தனிப்பட்டவர் மனித உரிமைகளைப் பேணி நடந்து கொள்வதற்கு பாரியதடைகள், உள்நாட்டிலும், சர்வதேச-அழுத்தங்களினாலும் அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினியும் வறுமையும், உள்நாட்டுப் போரும், ஆயுதக் கலாசாரமும், இருக்கும்வரை மனித-உரிமை என்பது கேள்விக்குறியே. சட்டங்களும் சாசனங்களும் தாள்களை நிரப்புமேயன்றி மனித உணர்வுகளுக்கோ, வாழ்வுக்கோ மாற்றத்தை ஏற்படுத்தாது, மனித-உரிமை தினம் அறிவிக்கப்பட்டு ஏறக்குறைய 70 ஆண்டுகள் கடந்தபோதும் நிலைமை மோசமானதாகவே உள்ளது.

மனிதன் மமதையும் ஆணவமுமின்றி ,மனிதத்தை பேணும்வரை, சட்டங்களை மாற்றியும், எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை என்பதே உண்மை!....

## மின்னஞ்சல் கடிதங்கள்-2

-அன்பின் சிவராஜா அவர்கட்கு அன்பின் வாழ்த்துதல்கள்.

நீங்கள் அனுப்பிய பணம் கிடைத்தது நன்றி. திரு திருமதி வேலாயுதம் ஈஸ்வரி அவர்கள் அனுப்பிய பணமும் கிடைத்தது. அவர்கள் கூறியது போலவே அந்த பணத்தை மாணவிக்கு படிப்பு செலவுகாக வழங்கி உள்ளேன். அவர்களுக்கும் எமது நன்றிகள். விபரமாக தபாலில் அனுப்புகிறேன். உங்களது உதவிகளுக்கு நன்றி. உங்களுக்காக தொடர்ந்தும் இறைவனைப் பிரார்த்திகிறோம்.

Hella KG
Frau Kathrin Just Ehret>
Company அனுப்பிய பணமும் கிடைத்தது. அவர்களுக்கும் எமது நன்றிகளை இதோடு கடிதமாக அனுப்பி உள்ளேன். விபரமாக தபாலில் அனுப்புகிறேன். உங்களது உதவிகளுக்கு நன்றி. உங்களுக்காக தொடர்ந்தும் இறைவனைப் பிரார்த்திகிறோம்.

Regards
Sis. J. Gladys.- Ruth Mission - Jeyapuram - Kilinochchi
ரூத் மிஷன் ஜேயபுரம் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இயேசுவே

## பிறந்து வா!...

மரம் செடி கொடிகள்
பூபாளம் பாடி ஆர்ப்பரிக்க
தென்றலும் குளிரும்
பனியும் சேர்ந்து பாட
மாட்டுக் குடிலில்
அன்னையின் மடியில்
கந்தைத் துணியில்
சுற்றி இருக்க
கர்த்தராய் யேசுவே
நீ பாரின் பாலகனாய்
இத்தரையில் பிறந்தபோது
வால் நட்சத்திரம்
இடையர்க்கு வழிகாட்டியதே
சாமக் காவலர்களும்
விலங்குகளின் கண்களும்
உம்மை வரவேற்று மகிழ்ந்தன
இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்
இந்தப் பூமிக்கு வந்தாய்
அன்றையகாலம் இன்றில்லை
கொண்டு வந்த அமைதியை
காலமும் காற்றும்தொலைத்தனவே
தாயகத்தின் இனவேறுபாடு
காணி, வீட்டுப் பிரச்சனை
உலகில் இயற்கையின் சீற்றம்
போரால் அழியும் மனிதர்கள்
பெருகிவிட்டது பூமியில்
மானிடம் மாண்புடன் வாழ
ஒவ்வொரு நாளும் நல்லநாளாய்
பிறக்கச் செய்யும் விந்தையுடன்
குழந்தை இயேசுவே நீ பிறந்துவா!...

திருமதி.ஜேயா நடேசன்
யேர்மனி.

## நியதி!...

மண்ணில் புதைந்திருக்கும்
விதைமீது விழுகின்ற
மழைதானே விதையை
முளை ஆக்குகின்றது!...

## வலை!...

குடும்பம் வறுமையில்
வெளிநாடு செல்லும் தாய்
இளவயதுச் சிறுமிகள்
காமுகர் வலையில்!...

## பணி!...

சுட்டு, வெட்டி, ஒட்டி,
பொய்களைப் பரப்புவதே
இன்றைய ஊடகங்களின்
தங்கத் தமிழ்ப்பணியாகும்!...

## மன்னிப்பு!...

கடந்தகால நிகழ்வுகளை
மாற்றாது - ஆனால்
எதிர்காலப் பாதைகளில்
ஆனந்தப் பூக்களைச் சொரியும்!....

திருமதி.இராஜேஸ்வரி
சிவராசா
யேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்காதலே...

பாலூட்டி சோறூட்டி
வளர்க்கவில்லை,
பாராட்டி சீராட்டி
வளர்க்கவில்லை,
கொஞ்சித்தான்
கெஞ்சித்தான் வளர்த்தெடுத்தேன்,
கொஞ்சந்தான்என்றில்லை
வாரித்தந்தேன்!
கண்மூடி படுத்தாலும்
உன்நினைவு,
கனவுலகில் சென்றாலும்
உன்வரவு,
அழுதாலும் சிரித்தாலும்
உனைநினைத்து,
தொழுதாலும் கேட்பதெல்லாம்
உன்மகிழ்வே!
சிந்தனையின் கருவாக
நீயிருப்பாய்,
செய்கையிலே உருவாகி
நீபுலர்வாய்,
கற்பனையில் கவிதையென
ஊற்றெடுப்பாய்,
காவியத்தின் பாவலனாய்
வார்த்தெடுப்பாய்!
உடைந்துநான் போகாமல்
சேர்த்தெடுப்பாய்,
உன்னுயிரில் எனைசேர்க்க
போர்தொடுப்பாய்-காதலே
மரித்தாலும் மங்காது
உன்நினைவு,
மண்ணுள்ளும் தாங்காது
உன்பிரிவு!.....

கவின்மொழிவர்மன்...

## வாய் பொத்தி ஒழிகிறார்....

சிலர் கண்டதும் சிரித்து
பேசி நழவுறார்
ஆனால் உள்ளுக்குள்ளே
புழுங்கியே சாவுறார்
அங்கும் இங்கும் ஓடுறார்
குதித்து கும்மாளமும் போடுறார்
அண்டல் வேலை பார்கிறார்
அடுத்தவன் வாழ்வுக்கு உலை
வைக்கப் பார்கிறார்!....

சில சமயம் மந்திரிச்ச
கோழி போலே
முங்கி முங்கி தூங்குறார்
மனம் பொறாமையில் முட்டியே
வயிறு முட்டிய மாடு போலே
மந்தி போல் கிடக்கிறார்!.....

அடுத்தவன் வீழ்ந்து விட்டால்
கை கொட்டி சிரிக்கிறார்
தனக்கு மட்டும் வந்து விட்டால்
வாய் பொத்தி ஒழிகிறார்!....

மனித வாழ்க்கை என்ன என்று
புரியாமல் தவிக்கிறார்
வாழும் காலம் வரை
தீயதை நினைத்தே
தீயில் வெந்து சாகிறார்!...

கவி மீனா... யேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மண்"அட்டைப்படக் கவிதை : (191)



பெற்றுக் கொள்ளுதல் ஒன்றே பேறில்லையெனில்
பெருமையிலும் சிறுமையிலும் பேதமை கரைந்திடும்
கற்றுக் கொள்ளுதல் நமக்குக் காலத்தின் வரமென்று
கணித்திடாதவர் வாழ்வு களிப்பினை இழந்திடும்!...

மற்றவர்க்குதவுதல் மாண்பெனக் கருதினால்
மனிதம் இம்மண்ணில் மங்காமல் நிலைத்திடும்
குற்றங்கள் களைந்திடும் குணமொன்று வாய்த்திடில்
குரோதமும் காழ்ப்பும் குவலயத்தில் மறைந்திடும்!...

வெற்றியும் தோல்வியும் வேறில்லையென உணர்ந்தால்
வேற்றுமையிலும் ஒற்றுமை வேர்விட்டுத் தளைத்திடும்
சுற்றமும் சமூகமும் சுகம்பெற நினைத்திடின்
சுயநலம் மறந்த வாழ்வு சுடரென ஒளிர்ந்திடும்!...

உற்றவர் துன்பத்தினை உள்ளத்தால் உணர்ந்தால்
உதவுகின்ற எண்ணமோ உணர்வோடு உதித்திடும்
பற்றும் பாசப்பிணைப்பும் பரிவுடன் பகிர்ந்திடில்
பாரினுக்குதவுதல் எவர்க்கும் பாங்காய் வாய்த்திடும்!...

வெற்றுப் பேச்சுக்களும் வீணான காலவிரயமும்
விழலுக்கிறைத்த நீராய் வெறுமையில் காய்ந்திடும்
கற்றதைப் பகிர்ந்தவர் கலையிலக்கிய வாழ்வோ
காலத்தின் நகர்விலும் கற்சிலையாய் நிமிர்ந்திடும்!...

-அம்பலவன்புவனேந்திரன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டெரிக்கும் சுனாமியின் சுவடுகள்..
**(நினைவுநாள் 26.12.2004)**

உருக்கிக்குடித்தஉயிர்களின் வாசம்
உலகில் இன்னும் மணக்கிறதே
நெருக்கிநொருக்கியஎலும்பின் ஓசையில்
நித்திலம் நடுங்குக் கிடக்கிறதே..

நெருப்பாய்படர்ந்தநீரின் ஊர்வலம்
நெஞ்சாங்கூட்டையேஎரிக்கிறதே
கருவைக்கூடக் கலைத்திட்டகதைகளை
கறுப்பலைகள்நியாயமெனவாசிக்கிறதே..

எருக்கங்காடாய் எங்களின் நெய்தல்
இருளில் மூழ்கிக் கிடக்கிறதே
செருக்குக்கொண்டுசீறியஅலைகள்
செந்நீரால் பூமியைக் கழுவியதே...

மருக்கைகொண்டேமண்ணில் புகுந்து
மாகடல்மரணவலையைவீசியதே
சுருக்கைஅவிழ்த்துசுனாமியின்வடிவாய்
சுருட்டியெடுத்துஉடல்களைச் சுவைத்ததே..

இருப்பிடம் பார்த்து இரவினில் நுளைந்து
எல்லைதாண்டியபயங்கரவாதம்
தரிப்பிடமில்லாதுதவித்திட்டமானிடம்
தறிகெட்டுக் கிடந்தின்னும் தவிக்கிறதே..

பருகியநீருக்குப் பண்டமாற்றாகத்தானோ
பாடைகளைக் கட்டியதுவங்கக் கடல்
பருக்கையைக்கூடக் காணாதவகையில்
பழியைத்தீர்த்திடபாவியரேதுசெய்தோமோ.?

**-அம்பலவன்புவனேந்திரன்..**

## காவிய வேங்கைகள்....

பாலா பிஷேகம் கண்டதில்லை
பசியுடன் பலநாள் காத்து நின்றார்
பதிலாய் எதையும் கேட்டதில்லை
பலிக்கடாக்களாக கொடுத்திட்டோம்
தவங்கள் இவற்காய் (நாம்)
நோற்றதில்லை!...

தவமிருந்த கருவறை கதறியள
தியாக வேள்வியில் ஆகுதியாய்
தங்களைத் தந்தே புடமிட்டார்
வித்துடல் விதையாய் தந்திட்டே
விளைநிலம் நிறைந்தே வாழுகிறீர்
வீரர்கள் உங்கள் தியாகங்கள்
விருட்ஷமாய் தமிழுடன்
செழித்திருக்கும்!...

கார்த்திகை திங்கள் மலர்ந்திட்டால்
கார்த்திகை மலர்கள் மலர்ந்
திருக்கும் கல்லறை கோவில்கள்
அர்ச்சித்தே கடமையின் நிறைவில்
உயர்ந்திருக்கும்!...

காலத்தைவென்றவர்
நினைவேந்தல் வாரம்
கார்மேகம் தானும் பூத்தாவும்
கருவிழி நிறைந்தே ஆறாகும்
கதறி அழுதே இருள் சூழும்
இதயம் ஏங்கி துடிக்கிறதே
இரு விழி திறந்து பாரீரோ
இனியும் களப்பலி வேண்டாமே
இவர்காய் ஒன்றாய் இணைந்
திடுவோம்!....

**கீத்தா பரமானந்தன்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமொழி -- தமிழ் சொற்கள்.........

சு
சுபாவம் - இயல்பு
சுலபம் - எளிது
சுவாரஸ்யமான - சுவையான
சேவை - பணி
சேனாதிபதி - படைத்தலைவன்
சௌகர்யம் - வசதி, நுகர்நலம்
சௌக்கியம் - நலம்
த
தசம் - பத்து
தத்துவம் - உண்மை
தம்பதியர் - கணவன் மனைவி, இணையர்
தரிசனம் - காட்சி
தர்க்கம் - வழக்கு
தர்க்க வாதம் - வழக்காடல்
தாபம் - வேட்கை
திகில் - அதிர்ச்சி
திருப்தி - நிறைவு
தினசரி - நாள்தோறும்
தினம் - நாள்
தீர்க்கதரிசி - ஆவதறிவார்
துரதிருஷ்டம் - பேறின்மை
துரிதம் - விரைவு
துரோகம் - வஞ்சனை
துவம்சம் - அழித்தொழித்தல், அழித்துத் தொலைத்தல்
தேகம் - உடல்
தேசம் - நாடு
தைரியம் - துணிவு
ந
நட்சத்திரம் - விண்மீன், நாள்மீன்
நமஸ்காரம் - வணக்கம்
நர்த்தனம் - ஆடல், நடனம்,கூத்து
நவீனம் - புதுமை
நவீன பாணி - புது முறை
நாசம் - அழிவு, வீண்
நாசூக்கு - நயம்
நாயகன் - தலைவன்
நாயகி - தலைவி
நிஜம் - உண்மை, உள்ளது
நிசபதமான - ஒலியற்ற,அமைதியான
நிச்சயம் - உறுதி
நிச்சயதார்த்தம் - மண உறுதி
நிதானம் - பதறாமை
நித்திய பூஜை - நாள் வழிபாடு
நிரூபி - மெய்ப்பி, நிறுவு
நிருவாகம் - மேலாண்மை
நிதி - பொருள்,செல்வம், பணம்
நீதி -அறம், நெறி, அறநெறி, நடுவுநிலை, நேர், நேர்நிறை, நேர்பாடு, முறை
ப
பகிரங்கம் - வெளிப்படை
பஞ்சாட்சரன்- ஐந்தெழுத்து
பரவசம் - மெய்மறத்தல்
பராக்கிரமம் - வீரம்
பராமரி - காப்பாற்று , பேணு
பரிகாசம் - இகழ்ச்சிச் சிரிப்பு
பரிசோதனை - ஆய்வு
பரீட்சை - தேர்வு
பலவந்தமாக - வற்புறுத்தி
பலவீனம் - மெலிவு, வலிமையின்மை
பலாத்காரம் - வன்முறை
பாணம் - அம்பு
பாதம் - அடி
பாரம் - சுமை

( அடுத்த இதழில் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னமே புகழ்பெற்ற பல பெண்பாற் புலவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் சேவையாற்றியுள்ளார்கள். சங்ககாலத்தில் சுமார் 37 பெண்புலவர்கள் இருந்திருக்கின்றார்கள். அவர்கள் பாடிய சுமார் 185 பாடல்கள் கடல்கோள்களுக்கு அகப்படாது எமக்குக் கிடைக்கின்றன. அவர்கள் ஆதிமந்தையார், பொன்முடியார், நக்கண்ணையார், அவ்வையார், ஒக்கூர் மாசாத்தியர், வெள்ளிவீதியார் போன்றோர் என அறியக் கிடக்கின்றது. அதில் அணு என்பது பிளக்க முடியாத அளவு மிகச் சிறியதுகள். அவ் அணுவைப் பிளக்கும் போது பிரமாண்டமான ஒரு சக்தி தோன்றும். அதாவது ஏழுகடல் அளவு சக்தி தோன்றும். ஒரு கடலின் ஆழமே அறிய முடியாது இருக்கும் போது 7 கடல் அளவு சக்தியை புகட்டிய குறள் என்னும் விளக்கத்தை

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

என்று திருக்குறளின் பெருமையை அறிவுபூர்வமாக எடுத்துக் கூறிய அவ்வையார் என்னும் பெண்பாற்புலவர் பாடிய பல பாடல்கள் பல எமக்குக் கிடைக்கப் பெறுகின்றன. முருகக் கடவுளிடம் நாவற்கனி பறித்துத் தரும்படி கேட்ட போது சுட்டபழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று வினாவிய முருகக் கடவுளை பழம் நீயப்பா ஞானப்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயப்பா தமிழ்ஞானப் பழம் நீயப்பா என்று பாடிப் புகழ்ந்த அவ்வையார் பாடல்களையும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பாடிய அவ்வையார் பாடல்களையும், குறுநிலமன்னன் அதியமான் காலத்தில் வாழ்ந்த அவ்வையார் பாடல்களையும் எடுத்து ஆராயப் புகுந்தால், பாடல்வரிகளில் தன்மையை நோக்கும் போது அவ்வையார் என்பவர் ஒருவரே என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது உள்ளது.

உதாரணமாக அறஞ்செய்ய விரும்பு, ஆறுவது சினம் என்று தொடருகின்ற ஆத்திசூடிப் பாடல்களையும்,

இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து

என்னும் புறநானூறு பாடல்வரிகளையும் எடுத்து நோக்கினால், வேறுபட்ட கவித்துவத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே அவ்வையார் என்னும் பெயருடைய வெவ்வேறு பெண் புலவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது உண்மையென ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.
திருமணம் செய்யாமல் கல்வி கற்று சமூகப்பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களே அவ்வை என்னும் பெயரால் அக்காலத்தில் அழைக்கப்பட்டனர். அவ்வழியில் சங்ககாலத்தில் வாழ்ந்த அவ்வையார், குறுநில மன்னன் பாரி வள்ளல் பிள்ளைகளான அங்கவை சங்கவை காலத்தில் வாழ்ந்த அவ்வையார் சோழர் காலத்தில் கம்பர் ஒட்டக்கூத்தர் காலத்தில் வாழ்ந்த அவ்வையார். பிற்கால ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நூல்களைத் தந்த அவ்வையார் என அவ்வையார்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. சங்ககாலத்து அவ்வை தற்போது மலையாளம் என்று சொல்லப்படுகின்ற சேரநாட்டிலே தர்மபுரி என்று தற்போது அழைக்கப்படும் தகடூர் எனப்படும் தலைநகரத்திலே யாளிதத்தனுக்கு மகளாகப் பிறந்தாள். பிள்ளை 3 வயதாக இருக்கும் போது தாய் இறக்கும் தறுவாயில் கலங்கி நிற்க

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனுஞ் செத்து விட்டானோ முட்ட
முட்டப்பஞ்ச மேயானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ

என்று பாடியதாகவும். அக்கணமே கவலை நீத்த தாய் உயிர்நீத்தாள். தந்தையும் உறவினர் வசம் பிள்ளையை ஒப்படைத்துவிட்டு வெளியூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுவிட்டார். இவர் கல்வி, சமயப்பற்று அத்தனையும் பெற்றவராய் சமுதாய சமயப்பணிக்காய்த் தன்னை ஒப்படைத்து நல்லறிவாற்றலுள்ள பெண்ணாய் வளர்ந்தாள் என வரலாற்று நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இக்காலம் கி.மு.300 – கி.பி 250 வரையுள்ள காலப்பகுதிகளாகும். இவர் பாடல்கள் சங்கப் பாடல்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலே தொண்டைமான், பாரி, அதியமான், எழினி, பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, சோழன் பெருநற்கிளி, சேரன் மாரி வெண்கோ போன்ற மன்னர்களைப் பற்றிய பாடல்களில் காணக்கிடக்கின்றன.

இவர் அக்கால குறுநில மன்னன் அதியமான் புகழ்பாடிப் பரிசில்கள் பெற்றுள்ளார். அவர் பெருமை கண்ட மன்னனும், அவரை அரசவைப் புலவராக அமர்த்தினார். இம்மன்னனிடம் சிறப்புப் பொருந்திய 12 ஆண்டுக் கொருமுறை காய்க்கின்ற கருநெல்லிக்கனியைப் பொதிகைமலை வாழ்ந்த தவமுனிவர் வழங்க அக்கனியை நீண்ட காலம் வாழ வேண்டிய ஒளவைக்கு அதியமான பரிசாகக் கொடுத்தான். அதியமானுடன் தொண்டைமான் போர் புரிய ஆயத்தமான போது போர் நடக்காதவண்ணம் தடுப்பதற்காக தொண்டைமானிடம் ஒளவையார் தூது சென்றார். தொண்டைமான் படைக்கலக் கொட்டிலைக் காட்டியபோது

இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனகரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றிலமாதோ

மன்னனே உன்னுடைய அரண்மனையிலேயுள்ள படைக்களங்கள் யாவும் போர்க்களத்தைக் காணாததால் மயில்பீலி அணியப்பெற்று, மாலை சூட்டப்பெற்று, நெய்பூசப்பெற்று அழகுடன் காணப்படுகின்றன. ஆனால், அதியமானின் வேல்கள் நாளும் பகைவர்களைப் போரில் குத்துதலால், முனைகள் முறிந்து சிதைந்து கொல்லன் உலைக்களத்திலே குவிந்து கிடக்கின்றன என்று அதியமான் பெருமையைப் பாடி தொண்டைமான் போரை நிறுத்தினார்.

சோழர்காலத்து 12ம் நூற்றாண்டு வாழ்ந்த ஒப்பற்ற புலவர்களான கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பொய்யாமொழி போன்றோர்க்கு ஒப்பாக அருங்கவியாற்றிய அற்புதத் தமிழ் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்தை எடுத்து வருகின்றேன். மன்னர்களைப் புகழ்ந்து பாடலும் அப்பாடலுக்கு மனமுவந்த மன்னர்கள் பரிசில் வழங்கலும் அக்காலத் தமிழ் பற்றுக் கொண்ட மன்னர்களின் மனப்பாங்கு. ஒரு மாமன்னனைக் காண அவ்வையார் செல்கின்றார். அம்மையே நீவீர் எந்த ஊர் என்று மன்னன் கேட்க

காலொந்தே னொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று கூனல்
கருந்தேனுக் கண்ணாந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்

வளைந்த சங்கு தேனையுண்பதற்காக வாய் திறந்துள்ள நாட்டுக்கு வல்லவனே! காவிரி நதி சூழ்ந்த நாட்டின் மன்னனே! உன்னைக் காண்பதற்காக நெடுந்துரம் பரபரப்போடு நடந்து வந்தேன். அதனால், கால் நொந்தேன், ஆங்காங்கே தங்கினேன். அதனால், எந்த ஊர் எனக்குச் சொந்த ஊர் என்பது என்று கூறுகின்றார்.

அதைக் கேட்ட மன்னனும் அரியணை காட்டி அமரச் செய்ய, அவ்விடத்தில் கம்பர் பாடல் ஒன்று படிக்கப்படுகின்றது. மன்னனும் கம்பருக்கு நிகர் யாருண்டு என்று புகழ்ந்துரைக்க

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும் - அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று

சூழ்ச்சிக்காரர் இருவர் தன்னைப் புகழ்வதற்காக வேண்டும், எல்லா விரல்களிலும் மோதிரங்கள் வேண்டும், பஞ்சால் அல்லது பட்டால் ஆடை அணிந்திருக்க வேண்டும், அவர்கள் எழுதிய கவிதை வேம்பாக இருந்தாலும் நல்லது என்று அவ்வையார் எழுந்து அவ்விடத்தில் பாடுகின்றார்.

இதுகேட்ட மன்னன் உலகத்து உண்மை இதுவாகிலும் அம்மையே! கம்பர் சிறப்பான கவி புனையும் ஆற்றல் மிக்கவர் என்று கூற

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கு மொவ்வொன்று றெளிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கணாங்குருவியின் கூடு, கரையான் புற்று, தேன்கூடு, சிலந்திக்கூடு, ஆகியவை யாராலும் இலகுவாகச் செய்து முடிக்கக் கூடியதல்ல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது. அதனால், யாம் பெரிதும் வல்லோம் என்று வலிமை சொல்ல வேண்டாம் என்று பாடினார். அத்துடன் எவ்வாறு புலமை கம்பருக்கு வந்திருக்கும் என்பதை எடுத்துக்காட்ட

சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழ நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் – நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்

என்று கூறி

காணாமல் வேணதெல்லாம் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே – நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தாக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி

என படிப்பு என்னவென்று அறியாதவர்கள் படித்தவர்கள் முன்னே வெட்கப்படாமல் நினைத்ததெல்லாவற்றையும் கூறலாம் ஆனால், படித்தவர்கள் முன்னே பணியாமல் இருக்கக் கூடாது. அது எப்படியென்றால் கிளி பெரும் பூனை வந்தால் கீச்சுக்கீச்சென்று கத்துவதைப் போன்றது.

இவ்வாறு பாட அவ்வை மதிநுட்பம் அறிந்த மன்னனும் அம்மையே! தங்கள் பெயர் எதுவென்று உரைக்க அவ்வை என்கின்றார். ஆ... அவ்வையா! என்று துடிதுடித்த மன்னனும் அவரை அரியாசனத்தின் தன் பக்கத்தில் இருத்துகின்றார்.

இவ்வாறு கல்வி ஆற்றல் மிக்க தைரியமான அவ்வையார் சோழர்காலத்தில் வாழ்ந்திருக்கின்றார். பிற்கால அவ்வையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற சமுதாய சீர்திருத்த சிந்தனைகளை விதைக்கும் இலகுதமிழ் பாக்களை யாத்திருக்கின்றார் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.

எப்போது வாழ்ந்த அவ்வை என்று காலக்கணிப்பீட்டில் மயக்கம் இருந்தாலும் அவ்வையார் என்ற பெயரிலே எமக்குக் கிடைக்கும் அத்தனை பாக்களும் எமது உள்ளத்தை மகிழ்ச்சிப்படுத்துவதாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 5 | 1 | 4 | 8 | 7 | 2 | 3 |
| 7 | 8 | 2 | 5 | 3 | 6 | 4 | 9 | 1 |
| 3 | 4 | 1 | 7 | 9 | 2 | 5 | 8 | 6 |
| 1 | 3 | 4 | 8 | 6 | 9 | 2 | 5 | 7 |
| 9 | 6 | 7 | 2 | 5 | 1 | 8 | 3 | 4 |
| 2 | 5 | 8 | 3 | 7 | 4 | 6 | 1 | 9 |
| 8 | 7 | 9 | 6 | 2 | 3 | 1 | 4 | 5 |
| 4 | 2 | 6 | 9 | 1 | 5 | 3 | 7 | 8 |
| 5 | 1 | 3 | 4 | 8 | 7 | 9 | 6 | 2 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-102

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| த் | ண் | டி | டா |
| தை | க | ல் | ட் |
| ரை | டு | ட் | க |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 165

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ந | த் | தா | ர் | ஐ | த் | பு |
| ல் | ண | ம | வ | ட் | டி | ட |
| வ | தோ | ரை | ளு | டு | ட் | ல |
| ழி | ல் | லா | ள் | ரி | ந | ங் |
| க | வி | ல் | வ | க | த | கா |
| ர் | ல் | வ | ரு | ட | ம் | ய் |
| மா | லீ | நா | தி | ரு | ட | ன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலன்-



வணக்கம்!..

வணக்கம்!...நான்தான் மதவடி மயிலன்...மீண்டும் வந்திருக்கிறன். என்ன எல்லாரும் சுகம்தானே. இந்த மயிலன் உங்களிடம் சுகம் விசாரிப்பதில் ஒரு சந்தோசம்தான். வேறு ஒன்றுமில்லை. சுகநலம் விசாரிக்க, இப்போ குளிரும் ஆரம்பமாகிவிட்டது இனி ஒண்டுக்கு மேல ஒண்டு என ஏழெட்டு உடுப்புக்களோட அலையவேண்டியதுதானே. சரி...சரி..இது வழமையான விடையம்தானே பாருங்கோ!...

இந்தமுறை விழாக்களைப்பற்றி உங்களோடு சிறிது அலசப்போறன் கண்டியளோ..விழா என்றால் யாருக்குச் சந்தோசம் வராது. இந்த மயிலனுக்கும் விழா என்றால் பிடிக்கும். அவை நல்ல கருத்துள்ள விழாக்களைச்சொல்ல வேண்டும். அதைவிட இந்த விழாக்களால் பிறருக்கு எப்படி உதவலாம் என்று ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். எங்கட மொழி,கலை, கலாச்சாரம், பண்பாடு பாதுகாக்கப்படவேண்டும், வளர்த்தெடுக்க வேண்டும். இது உண்மைதான். ஆனால் இன்று ஊர் உலகத்தில் என்ன நடக்கின்றது

ஊரில் விழாக்கள், கோவில் திருவிழாக்கள் எல்லாம் களைகட்டி ஓய்தாலும் ஆங்காங்கே பல விழாக்கள் அவ்வப்போது நடந்துகொண்டுதான் இருக்கின்றன. கோவில்த்திருவிழா என்று பக்திப் பரசவத்தில் பலர் வெளிநாட்டுப் பணங்களை அள்ளி இறைத்து தமக்குத்தாமே விழா எடுக்கும் ஒரு கூட்டம், பக்திப் பரவசத்தால் பலர் கோவிலைச்சாட்டி வயிறுபிழைக்கும் ஒருகூட்டம், அந்தவிழா, இந்தவிழா என நடத்திப் பணம் சம்பாதிப்போர் எனப்பலகூட்டம் கண்டியளோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனங்களும் ஆண்டவன் தண்டிப்பான் என்று பயந்து நடுங்கி வெளிநாட்டுக் காசுகளை விசுக்கி ஆடம்பரக் கோவில்களைக்கட்டி தங்கட விலாசத்தைக் காட்டுகிறார்கள். ஆண்டவனின் பக்தி கிடைக்கிறதோ...இல்லையோ... ஆலயங்களில் ஐயருக்கும் மேளக் காரர்களுக்கும், சோடினைக் காரார்களுக்கும் கோவிலில் கூலிவேலை செய்பவர்களுக்கும் நல்ல உழைப்பாம். கோவில்களின் உண்டியல் நிறையுதோ இல்லையோ இவர்களின் வங்கிக்கணக்கில் வெளிநாட்டுக் கரன்சிகள் நிரம்பி வழிவதாகவும் தாயகச் செய்திகள் தெரிவிப்பதாக இந்த மயிலனுக்குச் செய்தி எட்டியது பாருங்கோ!...

தற்போது நமது தாயகத்திலுள்ள அனைத்துக் கோவில்களிலும் பக்தர்களுக்குப் பதிலாக நாய்கள் எலிகளும் பக்தர்களாக மாறிவிட்டார்கள் என்று தெரியவருகின்றது. ஐயர் நாளாந்த பூசைசெய்து இந்த வாய்பேசா ஜீவன்களுக்குச் சாப்பாடுபோட, சனங்களோ கோவில் பக்கம் போவதும் குறைவாம். ஏனென்றால் நேரமில்லையாம் காரணம் என்னவென்று இந்த மயிலன் விசாரித்தபோது சின்னத்திரை நாடககங்களை ஒன்றும்விடாமல் பார்க்கவே நேரமில்லை என்பவர்களும், கோவில்களில் இடம்பெறும் நிர்வாகச் சண்டைகளாலும் பக்தர்களின் படை எடுப்பு குறைவடைந்து வருகின்றதாம்.

பதவிச்சண்டை, சாதிச்சண்டை, பணம் சொத்துச் சண்டை என்றெல்லாம் பெருகிவிட்டது பாருங்கோ. ஐயரும் குருக்களும் கைத்தொலைபேசியும் மோட்டார் சைக்கிளுமாக ஓடி ஓடிப் பூசை செய்து சனங்களைக்கொண்டு வெளிநாட்டுப் பணங்களைச் செலவழிக்கப்பண்ணுவதுடன் தாங்களும் சுளை..சுளையாகக் காசைச் சம்பாதிக்கிறார்கள். எது எப்படி இருந்தாலும் ஊரில் கண்டியளோ அனைத்துக் கோவில்களும் புதுப்பொலிவு பெற்றுள்ளன. ஆனால் கும்பிடும் பக்தர்கள் சரிபாதியாகக் குறைந்து விட்டதாக ஐயர்மாரும் குருக்கள்மாரும் தவியாய்த் தவிக்கின்றார்கள் பாருங்கோ...

வெளிநாடுகளிலிருந்து கோடி...கோடியாக அனுப்பப்படும் பணங்களில் பெரும்பங்கு இந்தக் கோவில்களுக்குச் செலவு செய்வதை யார்தான் சிந்திக்கிறார்கள். இப்பணங்களை முதலீடு செய்து பல தொழிற்சாலைகளை நிறுவி அங்கு வேலை இல்லாதோருக்கு வேலைகொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை மக்கள், முன்னாள் போராளிகள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோருக்கு உண வளிக்கலாம். இவர்களின் எதிர்கால வாழ்வுக்குப் பல திட்டங்களை உருவாக்கி அவற்றிற்குப் பணத்தைச் செலவழித்தால் எவ்வளவு பெரும் புண்ணியம் கிடைக்கும். இதை விட்டுவிட்டுச் சாமிகளுக்கும் ஆசாமிகளுக்கும் பணத்தை அள்ளி இறைப்பதையும் பக்திப் பரவசம், அன்னதானம் என கொட்டித் தீர்ப்போர் பற்றி இந்தக் கடவுள்களுக்கு இந்த மயிலன் பலமுறை முறைப்பாடு செய்தும் பலன் ஒன்றும் இல்லைப் பாருங்கோ. புலம்பெயர் (புலன்பெயர்ந்தவர்கள் மட்டும்)உறவுகளும் ஒருக்கா சிந்தித்துப் பாருங்கோ என இந்த மயிலன் கேட்கிறான் பாருங்கோ!...

வெளிநாடுகளிலும் கோவில், கொண்டாட்டம் என முழுந்து இப்ப இந்தவிழா அந்தவிழா எனத் தொடங்கிவிட்டன. கிறிஸ்மஸ், புதுவருடம் எப்படிக் கொண்டாடலாம் எனச்சிந்தித்து ஆயத்தங்களைத் தொடங்கி விட்டினமாம். கொண்டாட்டங்கள் நல்லதுதான். ஆனால் அவை ஆடம்பரமில்லாமல் எளிமையாக, சிக்கனமாகக் கொண்டாடுங்கோ என்றுதான் இந்த மயிலன் கூறுகிறான். வெளிநாடுகளில் சிலர் இருக்கிறார்கள் கொண்டாட்டம் கொண்டாடுவதற்கே விழா எடுப்பார்கள்.

ஒருசிலரும் ஒருசில அமைப்புக்களும் கொண்டாட்டங்கள் கொண்டாடி, ஒற்றுமையையும் நம் மொழி கலை கலாச்சாரங்களை வளர்க்கிறார்கள். இன்னும்சிலரும் சில அமைப்புக்களும் கோவில்களும் இந்தக் கொண்டாட்டங்களால் தாயக நலிந்த மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து வருகிறார்கள். உண்மையில் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே!..ஒரு வாழ்த்தையும் தெரிவிக்கின்றான் இந்த மயிலன். ஆனால் வெளிநாடுகளில் இந்த மயிலனுக்குத் தெரிந்த ஒரு சிலர் வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வருடத்தில் நாலு ஐந்து விழாக்களை நடத்துவதே வேலையாகிப் போட்டுது பாருங்கோ.. போதாக்குறைக்குத் தமக்குத்தாமே பட்டங்களும் பொன்னாடையும் போடுவதே வழக்கமாகிப் போட்டுது. இதை யாருக்குச் சொல்லி அழுவான் இந்த மயிலன்.

இவர்கள் மட்டுமா...இங்க வெளிநாடுகளில் பிள்ளை பிறந்ததிலிருந்து அந்தப்பிள்ளை கலியாணம் முடித்து பிள்ளை பெற்றபின்பும் கொண்டாட்டங்கள் தொடர்வது தொடர்கதையாகிப் போட்டுது பாருங்கோ. இங்கு ஒரு சிற்றியில் ஒருவன் 50வது, 60வது பிறந்தநாள், கலியாணநாள் எல்லாம் ஓகோ எனச்செய்து முடிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப தான் வெளிநாட்டுக்கு வந்து (25) வெள்ளிவிழா 30வது வருடம் எனக் கொண்டாட்டமும், தண்ணியடித்தலுமாக நடக்குது. இதற்கும் மேலாக தான் வெளிநாட்டில் சீட்டுப்பிடித்து கறுப்புப் பணம் சேர்த்ததற்கும் 25வருடங்கள் முடிந்ததற்கும் கொண்டாட்டம்தான். சீட்டு அங்கத்தவர்களும் கடனால் தற்கொலை செய்தவர்கள் போக எஞ்சிய அங்கத்தவர்களும் கறுப்புப் பணம் சேர்த்து சொத்து வீடு காணி கட்டிடம் கடை என வேண்டியவர்களும் இப்போ எல்லாத்தையும் மறந்து இந்த நாட்டுப் பிரசைகளாகியதற்கும் மாபெரும் கொண்டாட்டம் கொண்டாடி மகிழ்ந்த இந்தத் தமிழர்களின் கதைகள் இன்னும் ஏராளம் பாருங்கோ. இவற்றைக் கிண்டக்கிண்ட இன்னும் தோண்டி அள்ளலாம் அனால் இத்தோடு விடுகிறன் பாருங்கோ!...

புலம்பெயர் நாடுகளில் மூத்த தமிழ்குடி என்று தம்பட்டம் அடிக்கும் நம்மவர்களின் அலங்கோலங்கள் சரித்திரமாகவும் இந்த மயிலனால் எழுதமுடியும். பலரைப் பார்த்தால் தாம் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் போலவும் தமது மூதாதையர்கள் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் போலவும் தமது நடை உடை பாவனைகளை மாற்றி வாழப் பழகிவிட்டார்கள். இன்னும் சிலரிடம் Me Too வைப் போட்டுக் கிண்டினாலும் பெண்கள்மீது அவர்கள் கொண்ட காதல் கிசுமுசுக்கள் வெளிவந்துவிடும் பாருங்கோ. யார் பூனைக்கு மணி கட்டுவது என்றும் சிலர் அல்லல்படுவதாகவும் இந்த மயிலனின் காதுக்கு எட்டியது பாருங்கோ..

சரி..சரி..இந்த விழாக்களைப்பற்றி இந்த மயிலன் கனக்கக் கூறினாலும் இன்னும் பல கதைகள் அமுக்கித் தான் கிடக்கின்றன பாருங்கோ.. விழாக்களும் கொண்டாட்டங்களும் கூடாது அல்லது தேவையில்லை என்று இந்த மயிலன் கூற வரவில்லை. விழாக்கள் யாருக்கு? எப்போது? எப்படி? இதனால் என்ன பயன் என்று சிந்தித்து திட்டமிட்டு எளிமையாகச் செய்யுங்கோ. இதை மயிலனும் வரவேற்கிறான்.

இதைவிட்டு விட்டு ஆடம்பரமாக விழா எடுத்து காசைக் கரியாக்காதையுங்கோ ராசாக்களே!.. ராணிகளே!... இப்படியாகக் கொண்டாடப்படும் விழாக்கள் களியாட்டங்களால் நமது இனத்திற்கு நல்ல பயன் உண்டானால் அது வரவேற்கத் தக்கது. இதைவிடுத்து எல்லாரும் கொண்டாடுகினம் என்று நீங்களும் வெளிக்கிட்டிடாதையுங்கோ...சரி... சரி...நேரமும் போனது தெரியல... இன்னோரு விசயத்தோட மீண்டும் வருவான் இந்த மயிலன். அதுவரை எல்லாருக்கும் நத்தார், ஆங்கிலப்புத்தாண்டு வாழ்த்துக் களைகூறிக்கொள்ளுகிறேன்... அப்ப வரட்டே!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெல்சன் மண்டெலாவின் 15வது ஆண்டு நினைவுதினம்

மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவருமான நெல்சன் மண்டேலாவின் இறந்த தினம் 5-12-2013ஆகும் உலகமெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. மண்டேலாவின் பிறந்த தினத்தை 'மண்டேலா தினம்' என்று ஐ.நா பிரகடனப்படுத்தியிருந்தது. ஆரம்பத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பின்பு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார்.

இவர்கள் மரபுசாரா கெரில்லாப் போர்முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். மண்டேலாவின் 27 ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது. சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் 27 ஆண்டுகள் கழித்தார். 1990இல் அவர் விடுதலையானார்.

உலக சமாதான நோபல்பரிசைப்பெற்றஇவர் உலகம் முழுவதும் 250இற்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். நிறவெறிக்கு எதிரான போராட்டங்களுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த நெல்ஸன் மண்டேலா, 2013-ம் ஆண்டு தனது 95-வதுவயதில் காலமானார். உலகில் விடுதலையை வேண்டிப் போராடிவரும் நாட்டு மக்களுக்கு இவரின் போராட்ட வாழ்க்கை ஒரு பாடகமாகவே அமைந்தது என்றால் அது மிகையாகுமே!.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்பம் புளியமரம்

(ஒரு நிலஅளவையாளரின் அனுபவம்)
பொன் குலேந்திரன் - கனடா



நான் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில்(Surveyor General Department) வேலை செய்த ஒரு நில அளவையாளன். முப்பது வருட அனுபவம் எனக்கு . இலங்கையில் பல காடுகளில் நில அளவை வேலை செய்ததால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தாராளமாகப் பேசுவேன். வடக்கில் உள்ள வன்னிக் காட்டில் மூலை முடுக்குகள் எல்லாம் எனக்கு அத்துப்படிப் பாடம் நிலஅளவை செய்வதுக்கு எனக்கு உதவியாளர்களாக நால்வரும் ஒரு சமயல்காரனும் அரசு நியமித்துள்ளது. நால்வருக்கு தனி கூடாரத்தில் அவர்களே சமைத்து சாப்பிடவேண்டும். எனக்கும் என் சமையல்காரனுக்கும் தனிக் கூடாரம். காடுகளை அளப்பது அவ்வளவு இலேசான காரியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காட்டில் யானைகள் போன்ற மிருகங்கள், பாம்புகள் தாக்குதல்களை எதிர் நோக்க வேண்டி வரும். . பல தடவைகள் யானைகள் என் கூடாரத்துக்கு அருகே வந்து பிளிறி, என்னைப் பயமுறுத்திப் போகும். வன்னியில் A9 பாதை ஓரத்தில் உள்ள மரத்தில் தானாகவே தோன்றிய முருகண்டிப் பிள்ளையார் கோவில் ஐயருக்கு என் யானைப் பிரச்சனையை சொன்னபோது அவர் எனக்கு ஒரு சிறு பிள்ளையார் சிலையைத் தந்து நான் இருக்கும் கூடாரத்துக்குள் சிலையை வைத்து வணங்கும் படிச் சொன்னார் . அதன் படி செய்தேன். கூடாரத்துக்குள் ஒரு பிள்ளையார் சிலை வைத்து பூஜை செய்து வந்த காரணமோ என்னவோ யானைகள் என் கூடாரத்தைத் தாக்கவில்லை என்பது என் நம்பிக்கை.

வன்னிக் காட்டில் பாம்புகளுக்கு குறைவில்லை . அதனால் பல நாகதம்பிரான் கோவில்கள் வன்னியில் உண்டு பலர் பாம்பு கடித்து இறந்துள்ளார்கள் . எனது உதவியாளர் ஒருவரை ஒரு நாள் பாம்புதீண்டியது . நாங்கள் இருந்த கிராமத்தில் உள்ள பாம்புக் கடி வைத்தியரிடம் உடனே அவரை கூட்டிச் சென்று காட்டிய போது, அவர் பாம்பு தீண்டிய இடத்தில ஒரு கருப்பு நிறக் கல்லை சில நிமிடங்கள் வைத்து எதையோ வாயுக்குள் முணுமுணுத்து, அதன் பின் மூலிகை இலைகளின் சாறு அவருக்கு குடிக்கக் கொடுத்து குணப் படுத்தினார். சிலர் பாம்பு கடித்த இடத்தில் வாயால் கடித்து, இரத்தத்தை உறிஞ்சி எடுத்து பல தடவைகள் துப்புவார்கள் . அதன் பின் வைத்தியசாலையில் வைத்தியம் நடக்கும் .

காட்டில் வேலை செய்த போது சுவைத்து உண்ட. காட்டுச்சேவல் , மான், பன்றி ,றைச்சிகளை இன்றும் என்னால் மறக்க முடியாது . நான் குளித்தது குளத்தில் . உணவு உண்டது தாமரை இலையில் வன்னிப் பிரதேசத்தில் தொற்று நோய்கள் பரவலாகக் காணப்படுகின்றன. ஏனென்றால் மக்கள் காட்டில் வாழ்வதால் நோயாளிகள் மலேரியா, காலரா போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு தடவை நுளம்பு கடித்து மலேரியா நோயால் பாதிக்கப் பட்டு மிக கசப்பான மருந்து அருந்திய அனுபவம் எனக்கு உண்டு. அதனால் மலேரியா நோயில் இருந்து என்னைப் பாதுக்காக்கும் தெய்வம் கொசு வலை மட்டுமே. என்னை மலேரியா நோயில் இருந்து காப்பாற்ற கொசு வலையொன்றை அரச செலவில் கட்டிலோடு எனக்கு வாங்கிக் கொடுத்திருந்தது வன்னியில் பிரதான ஆஸ்பத்திரி கிளிநொச்சியில் அமைந்துள்ளபோதும் அங்கு சத்திர சிகிச்சைகளுக்கான வசதிகள் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் வேலை செய்த காலத்தில் பல ஊர்வாசிகளை சந்தித்தேன் அவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள். ஒரு காலத்தில் இலங்கையின் நெற் களஞ்சியமாக வன்னி திகழ்ந்தது . அந்த வன்னிவாசிகளில் ஒருவன் கருப்பையா என்ற ஒரு விறகு வெட்டி. வேட்டையும் ஆடுவான் . அவனைக் "கறுப்பன்" என்று வன்னிவாசிகள் அழைத்தனர் . அவன் நிறத்திலும் கருப்பு, அதோடு காட்டில் உள்ள பழங்களையும். மயில் இறகுகளையும் தாமரை இலைகளையும் பறித்து வாரம் இரு முறை கூடும் கிராமச் சந்தையில் விற்பவன். அது தான் அவனின் தொழில். கிராமச் சந்தையில் அவனை ஒரு நாள் நான் சந்திக்க நேரிட்டது "என்ன கருப்பன் எனக்கு ஒரு கட்டுத் தாமரை இலையும், கிழங்கும் , பாலப் பழமும் தரமுடியுமா"? நான் கருப்பனைக் கேட்டேன்

இதோ எடுத்துக் கொள்ளுங்கள் ஐயா" விலையைச் சொன்னான்.: நான் பேரம் பேசாமல் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்தேன், காரணம் அவனிடம் வன்னிக் காட்டைப் பற்றி எனக்கு பல விஷயங்கள் அறியவேண்டி இருந்தது கருப்பன். வன்னிக் காடு அடர்த்தியானது . நீ அக்காட்டில் ஒரு பாதை வழியே போனால் எப்படிச் சரியான பாதயில் வீடு திரும்புவாய்?போகும் போது இலை கோப்புகளை கொய்து அடையாளமாக நிலத்தில் போட்டுச் செல்வேன். திரும்போது அதைப் பார்த்து வீடு திரும்புவேன்:

"காட்டில் உன்னைப் பாம்பு கடித்த்துண்டா"

அது ஒரு தனி அனுபவம் ஐயா . ஒரு சமயம் நாக பாம்பு ஏன்னைக் கடித்து நான் உயிர் தப்பியது நாக தம்பிரான் கிருபை. விறகு வெட்டிக் களைத்து ஒரு மரத்தடியில் தூங்கி விட்டேன். நான் நித்திரரையாக இருக்கும்போது ஒரு நாகபாம்பு என் காலில் தீண்டி விட்டது . என் அதிர்ஷடம் நான் படுத்த இடதிற்கு அருகே ஒரு கட்டெறும்புப்புற்று இருந்தது எனக்கு தெரியவில்லை. அந்த புற்றில் உள்ள எறும்புகள் என்னைக் கடித்து என்உடலில் உள்ள விஷம் எல்லாம் போய்விடது ,என் உயிர் தப்பியது. பாவம் எறும்புகள் இறந்து கிடந்தன.

'நீ விறகு வெட்டுபபவன் ஆயிற்றே. உனக்கு வன்னிக்காட்டில் தெரியாத மர வகைகள் இல்லை. பல விதமான மரங்கள் உண்டு காட்டில், முதிரை, பாலை. காட்டு வேம்பு. நாவல்.. வில்வ மரம், பூவரசு, அருமையாக சில கருங்காலி . ஆலமரம்.இலுப்பை . புளியமரம். பனை ஆகியவற்றை சொல்லலாம். இதுசரி உனக்குத் தெரிந்த உயரமான மரம் எது'? நான் கேட்டேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தெரியாதா ஐயா உங்களுக்கு? குளத்தருகே உள்ள "குறிப்பம் புளிய மரம்"பெரிய பரந்தனில் நூறாண்டுகள் நிறைந்த, பனைகளை விட உயர்ந்த புளியமரம் ஒன்று உண்டு. காட்டில் எங்கிருந்தாலும் ஒரு சிறிய மரத்தில் ஏறிப்பார்த்தால் அம்மரம் தெரியும். அதன் திசையை நோக்கி நடந்தால் எவரும் தவறாது வீடு போய் சேரலாம்.. நாள் வழிகாட்டும் மரம் குறிப்பம் புளியின் அருமை உணர்ந்தவர்களைப் பேய் பிடிப்பதில்லை என்ற நம்பிக்கை ஊர்வாசிகளுக்கு உண்டு.

ஒரு புளியமரம் சராசரி 80 அடி உயரத்துக்கும் 40அடிகளுக்கு பரந்து வளரக் கூடியது. சுமார் ஆறு ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி விடும் 300ஆண்டுகுகு மேல் வாழக் கூடியவை. இந்த குறிப்பம் புளிய மரம் பாண்டர வன்னியன் காலத்து மரம். என்று கருப்பன் சொன்னான் .எனது கணிப்பின் படி கருப்பன் காட்டிய மரத்தின் உயரம் நூறு அடி மட்டில் இருக்கும். ஒரு பெரிய அரக்கனை போல் அது காட்சி கொடுத்தது

கறுப்பன் மேலும் சொன்னான் பலருக்கு நிழல் கொடுக்கும் மரம் அது .அம்மரத்தைத் தழுவி செல்கிறது இரு கிரவல்பாதை அந்த மரத்தில் இலை தெரியாமல் காய்க்கும் புளியங் காயை ஊர்வாசிகள் சமையலுக்குப் பாவிப்பார்கள் , அந்த மரத்தின் கீழ் ஒரு வைரவர் உண்டு. பக்கத்தில் உள்ள வயலில் வேலை செய்யும் பெண்கள் அந்த மரத்தில் சேலையில் ஏணைகட்டி தம் குழந்தைகளை தூங்க வைப்பர்.

அது காட்டில் நடந்து செல்வோரை பேய் பிடிக்காமல் இருக்கும் காவல் தெய்வம். வைரவருக்கு வருடத்துக்கு ஒரு தடவை ஊர்வாசிகள் பொங்கிப்படைப்பார்கள் ஒரு குளத்துக்கு அருகே இருப்பதால் சில காலங்களில் வெளி நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வரும் வெள்ளை நிறப் பறவைகள் அந்த மரம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்ளும்.அதனால் அந்த பச்சைநிற மரம் வெள்ளை நிற மரமாகக் காட்சி தரும்.

அது என்ன கையில் என்ன வைத்திருக்கிறாய் இது ஈச்சங்குருத்து. இது மிகவும் ருசியானது மாசி, பங்குனி மாதங்கள் ஈச்சங்குருத்து வெட்ட உகந்த காலமாகும். அது சரி மான் பன்றி இறைச்சி வேட்டைஆடி கொடுக்கிறாயே உன்னிடம் துவக்கு இருகிறதா? அவன் சிரித்தபடி, விதானையாரின் லைசன்ஸ் உள்ள துவக்கை சிலசமயம் அவருக்கு இறைச்சி தேவை படும்போது வேட்டையாடக் கொடுப்பார் என்றான் கறுப்பன்,

அரசசேவையில் இருந்து நான் ஒய்வு பெற்று சில வருடங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பரந்தனுக்குச் சென்ற போது என்னை ஒரு காலத்தில் கவர்ந்த குறிப்பம் புளிய மரத்தை பாரக்க சென்ற போது எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. மரம் இருந்த இடத்தில ஒரு இராணுவ முகாம் இருத்தது. அந்த முகாமை சுற்றி முள் வேலி. கிரவல் பாதை ,ராணுவத்தின் வாகனம் வசதியாக போய் வர அகண்ட தார் போட்ட பாதையாக மாறி இருந்தது. புலம் பெயர்ந்த பறவைகளையும், வைரவரையும் காணவில்லை. புளிய மரம் இருந்த இடத்தில சுமார் இரண்டடி உயரமுள்ள அரசமரமும் „அதன் கீழ் புத்தர் சிலையும் இருந்தது பக்கத்தில் உள்ள வயல்கள் கவனிப்பார் அற்றுக் கிடந்தன. அரச இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் அந்த இயற்கையின் அழகு சீரழிந்து கிடந்தது .பேயுக்கும், மிருகங்களுக்கும் பயந்த ஊர்வாசிகள் இப்போது இ ர ா ணு வ த் து க் கு ப் பயப்படவேண்டி இருந்தது.

(யாவும் உண்மையும் புனைவும் கலந்தது)

## பொது அறிவு வினா விடைகள்....

உலகின் முதல் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டரின் (electronic computer) பெயர் என்ன? இனியாக்

உலகின் மிகப் பழமையான மியூசியம் எது? ஆஸ்மோலியன்

கோள்களின் இயக்கத்தை கண்டுபிடித்தவர் யார்? கெப்ளர்

கணிப்பொறி மொழியைக் கண்டுபிடித்தவர்? - கிரேஸ் கோப்பர்

உலகின் நீண்ட கடற்கரை எது? மியாமி

உலகிலேயே அதிக அளவு அணுசக்தியைப் பயன்படுத்தும் நாடு? பிரான்ஸ்

உலகிலேயே மிக வேகமாக இயங்கும் பாம்பு? - கறுப்பு மாம்போ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நிலவரம்...... (சென்ற இதழ் தொடர்ச்சி)

திருமதி. கலைவாணி.
ஏகானந்தராஜா
ஜேர்மனி


நாட்டு நிலவரத்தில் நல்லூர் நிலவரம்பற்றி பார்க்காமல் போக முடியுமா? நான் பிறந்துவளர்ந்த இடமாச்சே. நான் ஊரில் நின்றபோதே நல்லூர் கந்தனுக்கு ஸ்வர்ண விமான மகாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதாகவும் அதற்கான சொர்ணம் (தங்கம்)சேகரித்து வருவதாகவும் அறிந்தேன். நான் பிறந்ததிலிருந்து இன்றுவரை அர்ச்சனைக்காக ஒரு ரூபா மட்டுமே அறவிடப்படும் நல்லூர் கந்தனிடம் இவ்வளவு பணம் இருக்கிறதா?



சந்தணம் மெத்தினால்......என்று ஏதோ கூறுவார்களே அப்படி நினைத்துக்கொண்டேன். தமிழர்களின் தாயகத்தை மீட்க போராளிகள் ஒரு காலகட்டத்தில் மக்களிடம் தங்கம் சேகரித்தனர். இன்று தாயகமே இல்லாத தமிழன் ஆளுக்கொரு தங்க நாணயம் நல்லூரானின் உண்டியலில் போடுகிறார்களாம். என்னே தமிழர்களின் ஆன்மீகப்பற்று தங்கவிமான மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. நிமிர்ந்து பார்க்கிறேன். என் கண்களுக்கு கிளிநொச்சிப் பகுதியில் நான் பார்த்த சில கொட்டில் வீடுகளின் கூரைகள் கண்முன்னே வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மதவளசிங்கன்குளம் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பல இருப்பதாக ஒரு சமூக ஆர்வலர் கூறினார். அவர்கள் வாழும் அந்த பகுதியை நோக்கிச் சென்றோம். அனேகமாக சிறிய சிறிய கொட்டில்கள் ஓலைகளால் வேயப்பட்டும் சில தகரங்களாலும் சில கொட்டில்கள் பனைமட்டைகளாலும் படங்குகளாலும் வெயில் மழையினின்று பாதுகாப்பதற்காக வேயப்பட்டனவாகக்காணப்பட்டன. வாகனத்தை நிறுத்தி அவர்களின் குடும்ப நிலவரங்களைப் பற்றி அளவளாவினோம். அனேகமான குடும்பங்களில் தலைவன் இல்லை. பலர் போரில் உயிர் இழந்ததாக கூறினர். இன்னும் சிலர் வறுமையின் கொடுமையில் குடும்பங்களை பராமரிக்க முடியாமல் மனநோயினால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்கள்.

இக்குடும்பங்களை குடும்பத்தலைவிகளே பராமரித்துவருகின்றனர். எல்லோரும் வறுமையில் இருந்தாலும் தமக்குள் சிலரை அடையாளம் காட்டி அவர்கள்தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் உங்களால் உதவமுடிந்தால் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள் என்று கூறினார்கள். தமது வறுமையிலும் மற்றவருக்காக சிந்தித்ததும் விட்டுக்கொடுத்ததும் அவர்களது பண்பையும் ஒற்றுமையையும் பறைசாற்றியது. இந்தநேரத்தில் நான் யாழ்ப்பாண மக்களின் பண்பை நினைத்துப்பார்த்தேன்.

புலம்பெயர்ந்து மீள் குடியமர்ந்தவர்களுக்காக வழங்கப்படும் சிறு சலுகைகள் நிவாரணப்பணம் பற்றி தெரிந்தவர்கள் தாம் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைபெற்றுக் கொண்டு மற்றவர்களிடம் கூறாமல் இருப்பவர்களைப் பார்த்திருக்கிறேன். கிளிநொச்சி மதவளசிங்கன்குளப் பகுதியில் இனங்காட்டிய குடும்பத்தை சென்று பார்த்தோம். வீட்டில் தந்தையை இழந்த மூன்று பெண்பிள்ளைகளும்கடைசி ஆண் பிள்ளையுமாக தாயாருடன் ஒரு சிறிய கொட்டிலில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் கொட்டில் தகரம் கிடுகு பிளாஸ்ரிக் பழைய சேலை என கிடைத்த பொருட்களையெல்லாம் மறைப்பாக உபயோகித்து அதற்குள் வாழ்கிறார்கள். குடும்பத்தலைவி கிடைக்கின்ற சிறு வேலைகளை செய்துவருகிறார். வருமானம் போதாதமையால் மூத்த பெண்பிள்ளையின் படிப்பை நிறுத்தி ஆடை தைக்கும் தொழிற்சாலைக்கு அனுப்பிவிட்டார்.


வீட்டில் ஆடைக்கே வழியில்லாத நிலமையை பார்த்த போது இரத்தம் உறைந்தது. வேலைக்குப் போகாத நேரங்களில் வீட்டில் இருந்து தையல் செய்து வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ளட்டுமே என்று நாம் ஒரு தையல் மெசினை வாங்கிக் கொடுத்தோம். அந்தக் குடும்பத்திற்கு இயற்கை உபாதையை கழிக்கக் கூட மறைவிடம் இல்லை. கிணற்றடியில் கால் வைக்கவே பயமாக இருந்தது. கல்சரிந்து உள்ளே விழுந்துவிடும் நிலமை காணப்பட்டது. இது ஒரு வீட்டின் சரித்திரம் இன்னமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள நிறைய உண்டு. (அடுத்த இதழில் தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் பொன்மாலைப்பொழுது - 197



ஐரோப்பாவில் மிக நீண்ட தொடர்மேடை கண்டுவரும் இலண்டன் தமிழ்வானொலியின் பொன்மாலைப்பொழதரங்கு ஜேர்மனியில் 115ற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றிய 35 நிகழ்வுகளை நடாத்தி வெற்றி கண்டது. சமூகவிழிப்புணர்வு நாடகம்- பரதசூடாமணி திருமதி துஷ்யந்தி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவர்கள் பங்கேற்ற -"பத்மாசூரவதம்" நாட்டிய நாடகம் - மற்றும் பல நிகழ்வுகள் ஒன்றிணைந்திட எம்மவர் பாடல்கானக்குரல் பாடல் போட்டியும் இணைவுபெற எம்மவர் திறமைகள் ஒன்றிணைந்தன.

பார்வையாளர்கள் அனைவரையும் மனநிறைவும் திருப்தியும் நிறைத்த பொன்மாலைப்பொழுது பாமுகத்தொலைக்காட்சி அதிபர் திரு.திருமதி நடாமோகன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள ஏழு இளையவர்கள் நிகழ்வினை மிக மிக உற்சாகத்துடன் தொகுத்தளித்தார்கள். சபையினரை கவர்ந்த மாபெரும் நிகழ்வாக மிக மிகப்பாராட்டினைப் பெற்ற பொன்மாலைப்பொழுது-197

பங்குபற்றிய கலைஞர்கள் அனைவருக்கும் பார்வையாளராக கலந்து நிகழ்வினை உற்சாகப்படுத்தியவர்களுக்கும் மிக மிக நேர்த்தியாக தொகுத்தளித்த வாகீசன் , வேதிகா விதுஷா, தீபா, கல்யாணி, அபிராமி, அபிநயா அனைவருக்கும் அன்புப்பாராட்டுக்கள் 21.10.18 இல் பொன்மாலைப்பொடுத-198 நெதர்லாந்து நாட்டில் மிகசிறப்பான ஒன்றுகூடல் அரங்குடன் பெருமிதம் பெற்றது மிக மிக வாழ்த்துக்கள்!..

-ஏற்பாட்டாளர் குழுவின் சார்பில் வசந்தா ஜெகதீசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞருடன் ஒருதடவை....



இற்றைக்குப் பத்துஆண்டுகளுக்கு முன் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தனது 84வது வது பிறந்த தினத்தில் ஐரோப்பிய தமிழ்வானொலியில் புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு அளித்த பேட்டியில் பலரும் பல கேள்விகளை நடுநிசி கடந்தும் தொடுத்துக்கொண்டிருந்தனர். அப்போது கலைஞர் அவர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சுவார்சியமாக பதில் அளித்துக்கொண்டிருந்தார். அப்போது நானும் ஒரு கேள்வியைக் கேட்கலாம் என எண்ணினேன்.

பல குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு அன்றாடம் கடற்தொழில் செய்யும் தமிழக மீனவர்களைப்பற்றிய கேள்வியாகும். பாக்குநீரிணைக் கடற்பகுதியில் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படைகள் சுட்டுக்கொல்வதையும் அடாவடித்தனங்களையும் தங்கள் அரசால் ஏன் தடுத்து நிறுத்த முடியவில்லை?..

முன்நாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, இலங்கைப் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. இதனால் சிறிலங்கா கடற்படையினர் சுமார் 10 வருடங்களில் சுமார் 400 இந்திய மீனவர்களைச் சுட்டுக்கொன்றுள்ளதுடன் பல படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் அபகரித்திருக்கிறார்கள். இது உலகத்தில் எங்கும் நடைமுறையில் இல்லாத விடையமாகும். அது இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்காரணம் கச்சதீவு சேதுகரை குறுநில மன்னர்களின் ஆட்சியின்கீழ் இருந்தகாலம் தொடக்கம் தமிழ்நாட்டு மீனவர்களது பரம்பரைப்பழக்கமாகி கச்சதீவுப் பகுதிக்குள் நுழைவது சர்வசாதாரணமா இருந்தது. இந்த எல்லை இன்றும் நிரந்தர எல்லைக்கோடு இன்மையால் அப்பாவித் தமிழ்நாட்டு மீனவர்களின் உயிர் இலங்கைக் கடற்படையினரால் பறிக்கப்படுவது வழக்கமாகிவருகின்றது. இந்தக் கெடுபிடியிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற தங்களால் ஏன் நடவடிக்கை எடுக்க முடியாது என்று வானொலியில் கேள்வி கேட்டேன்.

அப்போதய இந்தியப் பரதமர் இந்திரா காந்தி, இலங்கைப்பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. இதன்பயனால் சுமார் 400 தமிழக மீனவர்கள் இலங்கைப்படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதைத்தடுக்க வேண்டுமானால் கச்சதீவை இந்தியா திரும்பப்பெற வேண்டும். இதனால் தமிழக மீனவர்களின் இழப்பைக் கட்டுப்படுத்தலாம் தாங்கள் முதலமைச்சர் என்றவகையில் கச்சதீவை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைக்க நடவடிக்கை எடுக்கலாம் என நம்புகிறேன். அவரிடம் இதுபற்றிய விளக்கத்தைக் கோரிநின்றேன். அதற்கு அவர் அளித்த பதில்....

நண்பரே!...நாளை தமிழீழம் அமையும்போது கச்சதீவும் தமிழீழத்தின் ஒரு பகுதியாக அமையப் போகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். இது தீர்க்க தரிசனமா?...அல்லது மீண்டும் மீண்டும் மீனவர்களின் உயிரிழப்புகள் தொடருமா?..இலங்கை அரசியலின் கடும்போக்கும் தற்போதய நிலைப்பாடுகளும் இது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பது தெரியவில்லை.

நாளை தமிழீழம் மலரும் என கலைஞர் அவர்கள் சொன்ன வார்த்தைகள் வெறும் அரசியல் பேச்சா?...அல்லது தீர்க்க தரிசனமா? என்பதெல்லாம் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். அல்லது அரசியல் வாதிகளும் இனவாதிகளும் காலத்திற்குக் காலம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு தெரிவிக்கும் கருத்துக்களா?.."எல்லாம் அரசியலில் சகசமப்பா" நடக்குமா?..நடக்காமல் போகுமா?...எது எப்படியாயினும் மீனவர்களின் உயிர்கள் பறிபோகாமல் இருந்தாலே கோடி புண்ணியமாகும்!....

- சோம குலநாயகம் - யேர்மனி -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம் நோக்கிய பயணம்!.... (பகுதி-2)

"பெற்றதாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவானிலும் நனி சிறந்தனவே"

25-08-2018 எமது ஊர் (நாவற்குழி)காந்தி சனசமூக நிலையத்தின் 65வது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி மாபெரும் சைய்க்கிள் ஓட்டப் போட்டி வடமாகாண ரீதியில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் சுமார் 25 போட்டியாளர்கள் பங்குகொண்டனர். 50 கிலோமீட்டர் ஓட்டம் சாவகச்சேரி மீசாலை சராசாலை புத்தூர், கோப்பாய், கைதடி, நாவற்குழி என ஒரு சுற்று வட்டம் எனத் தொடங்கிய இடத்தையே முடிவடைந்தது. பொலிஸ் பாதுகாப்புடன் ஒலி ஒளிப்படக்கருவிகளுடன் நானும் வாகனத்தில் அமர்ந்து போட்டி முழுவதையும் ஊர் எல்லாம் உலாவந்து ரசித்து மகிழ்ந்தேன். இதில் ஒரு புதுமை 20 - 25 வயது வாலிபர்களுடன் 55 - 60 வயது முதியவர்களும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு கொண்டு ஓடி முடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வயதானவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் பணப்பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை இந்த வாசிகசாலை நிர்வாகத்திற்குப் பாராட்டுக்கள். அத்தோடு ஓடி முடித்த அத்தனைபேருக்கும் பணப்பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடையமாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை நான் தாயகம் சென்றதற்கு இன்னுமொரு காரணம் எமது ஊரின் நூல்நிலையத்தின் 65வது ஆண்டுவிழாவாகும். புலம்பெயர் தேசங்களில் வாழும் ஊரின் உறவுகள் உட்பட புலம்பெயர்வாழ் எமது வாசிகசாலை நிர்வாகத்தலைவர் திரு. ஜெ. ஜேயபாலன் அவர்கள் லண்டனிலிருந்து வந்திருந்தார். இன்னும் பல புலம்பெயர்வாழ் உறவுகளும் வந்திருந்தனர்.

சுமார் 20-25 வருடங்களின் பின் புலம்பெயர்வாழ் உறவுகளின் நிதி உதவியுடனும் தாயகம்வாழ் ஊர் உறவுகளின் நிதி உதவியுடனும் விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 26-08-2018 ஞாயிற்றுக்கிழமை ஊர் விழாக் கோலம் பூண்டது. ஒலிபெருக்கி வானைப்பிழந்து ஒலி எழுப்பிக்கொண்டிருந்தது. பிற்பகல் 4 மணி. நூல் நிலைய முற்றலில் பிரபலங்கள் விருந்தினர்கள் காவல்துறை அதிகாரிகள், அரசஉத்தியோகத்தர்கள், நிலைய நிர்வாகிகள் பொதுமக்கள் எனக்கூட்டம். சிறப்பு விருந்தினர்களில் நானும் ஒருவனாகச் சேர்ந்துகொண்டேன். அனைவருக்கும் மாலை மரியாதை அளிக்கப்பட்டு மேளதாளத்துடன் ஊர்வலமாக விழா அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.






நிலைத்தலைவர் திரு ஆ. பாலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரமுகர்கள், காவல்துறையினர், அரசியல்வாதிகள், பொதுச்சேவையாளர்கள் உரைகள் இடம்பெற்றன. புலம்பெயர் தேசம் ஒன்றில் யேர்மனியில் கடந்த 28 வருடங்களாக "மண்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, கலை,இலக்கிய, சமூக சஞ்சிகையை வெளியிட்டுவரும் என்னையும் சொற்பொழிவாற்றச் செய்து நான் பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்த நிர்வாகத்துக்குப் பாராட்டுக்கள். இந்த விழாவில் எமது ஊரின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு உழைத்த சுமார் 20 முதியவர்கள் விழா மேடைக்கு அழைத்துப் பொன்னாடை போர்த்தி பூமாலை அணிந்து கௌரவிக்கப்பட்டமை எல்லோராலும் பாராட்டப்பட்டது. மிகவும் சிறந்த செயற்பாடு என நான் கருதுகிறேன். ஏனெனில் அவர்கள் வாழும் பொழுதே கௌரவிக்கப்படும்போது அவர்களும் மகிழ்வார்கள்தானே. இதைவிட நமது ஊரின் தற்போதய (98 வயது) மூத்த பிரசை எனக்கணிக்கப்படும் திருமதி வெள்ளையர் அம்மாக்கா என்னும் அம்மையார் மேடைக்குத் தூக்கிவரப்பட்டு பூமாலை அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட செயல் மிகவும் அற்புதம். நிலைய நிர்வாகத்தினருக்கு வாழ்த்துக்கள்.

விழாவில் மாணவமணிகளின் நடனம், நாடகம் எனவும் இடம்பெற்றன. போட்டிகளின் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசளிப்பு நிகழ்வு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இறுதியாக இசைக்குழுவினர் அதிகாலைவரை இசைவேள்வியை நடத்திக்கொண்டிருக்க ஆடல் பாடல் என வயது வித்தியாசம் இல்லாமல் சிறுவர் தொடக்கம் முதியோர்வரை ஆடிப்பாடி மகிழ்ந்தது பெரிய சந்தோச நிகழ்வாக மாறியது என்றே கூறவேண்டும். சிறுவனாக இருக்கும் போது கோவில் திருவிழாக்களில் கடலை ஆச்சியிடம் கடலை வேண்டி உண்டதும் ஐஸ்கிறீம் வேண்டிச் சாப்பிட்டநினைவுகள் அன்றைய தினமும் பல நட்புக்கள் உறவுகளோடு உண்டு குடித்து மகிழ்ந்தது பெரும் பாக்கியம் எனக்கருதுகின்றேன். விழாவைச் சிறப்பாகச் செய்துமுடித்த எனது ஊரின் உறவுகள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 யூலைமாதம் வடமாகாண முதலமைச்சருக்கு நான் யேர்மனியிலிருந்துவந்து தங்களைச் சந்திக்க விரும்புகிறேன் எனக் கடிதம் அனுப்பி இருந்தேன். அதற்கு அவர்கள் 28-8-2018 தேதியன்று கைதடியிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்திப்பதற்குப் பதில் அனுப்பியிருந்தார்.அதன்படி நானும் எனது ஊர் காந்தி சனசமூக நிலையத்தின் தலைவர் திரு ஆ.பாலேந்திரன் செயலாளர் திரு சி.றஞ்சித் ஆகியோர் சென்றிருந்தோம். கௌரவ முதலமைச்சர் திரு. சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஏற்கனவே நேரம் குறிப்பிட்டபடி காலை பத்து மணிக்கு தமது அலுவலகத்தில் வரவேற்றார். மரியாதையின்படி அவருக்கு நான் பொன்னாடை ஒன்றை அணிவித்துக் கௌரவித்தேன்.

புலம்பெயர்வாழ் எழுத்தாளர்கள், மற்றும் ஊடகங்கள் பற்றியும் மண் சஞ்சிகையின் 28வருடகால செயற்பாடுகளையும் குறிப்பாக ஆதரவற்ற பிள்ளைகளுக்கு எமது வாசகர்கள் செய்துவரும் உதவிகள் எனப் பல விடையங்களை எடுத்துரைத்ததுடன் நாட்டின் அரசியல் நிலவரங்களையும் மாகாணசபை விடையங்களையும் சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடினோம். எனது ஊர் வாசிகசாலைசார்பில் மகஜர் ஒன்றையும் நியைலத்தலைவர் கையளித்தார். நமது விடையங்களை எல்லாம் செவிமடுத்த முதலமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் உங்கள் தேவைகள், நிலைப்பாடுகள் பற்றி எழுத்துமூலம் அறியத்தரும்படியும் கேட்டுக்கொண்டார். ஒரு திறமைமிக்க முதலமைச்சர், ஒரு உயர்நீதிமன்ற இளைப்பாறிய நீதி அரசர், மேலாக நல்லதோர் மனிதர் இவரைச் சந்தித்த பெருமையும் மகிழ்வோடும் அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக நிறுவனம் - கொக்குவிலில் அமைந்துள்ளது. யேர்மனியிலிருந்து நான் தாயகம் நோக்கிப் புறப்படுவதற்கு முன்பு லண்டனில் வசிக்கும் எனது ஊடக நண்பர் திரு பத்மநாபஐயர் ஓர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதாவது கொல்குவிலில் இயங்கிவரும் நூலக நிறுவனத்தை ஒரு தடவை சென்று பார்க்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார். அதன்படி 29.08.2018 அன்று அந்த நிறுவனத்திற்கு விஜயம் செய்தேன். அந்த நிறுவனத்தின் பொறுப்பாளர் திரு சோமராஜ் உட்பட அங்கு பணிபுரிவோரில் சுமார் பத்துப்பேர் வரை என்னை வரவேற்றனர். உலக நாடுகளிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் கவிஞர்கள் கலைஞர்கள் என அனைத்துப் படைப்பாளிகளின் பழைய புதிய படைப்புக்களை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதாவது அனைத்து வெளியீடுகளும் கணனி மயப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல பணியாளர்கள் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள பழமைவாய்ந்த அவணங்களையும் பார்வையிட்டேன். ஆகவே புலம்பெயர்வாழ் எழுத்தாளர்களே உங்கள் வெளியீடுகளை அழியவிடாமல் ஆவணப்படுத்துங்கள். நாம் இல்லாமல் போனாலும் நமது படைப்புக்கள் என்றும் உயிர்வாழும். ஆகவே உங்கள் படைப்புக்களை இந்த நூலக நிறுவனத்திற்கு அனுப்பி வையுங்கள். மேலதிக தகவல்களைப் பெறவிரும்பினால் எம்மோடு தொடர்புகொள்ளலாம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


30.08.2018 காலை நேரத்தில் எனது ஊரின் நாவற்குழி கிராமசபைக்கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் அமைந்துள்ள கட்டிடம்தான் அமரர்கள் கந்தையா-கனகம்மா நினைவு மண்டபம். இந்த மண்டபத்தைச் சென்றடைந்தபோது அதன் தாபகர் என்னை அன்போடு வரவேற்றார். இது ஒரு நிதியமாகவும் காணப்படுகின்றது. இதன் தாபகர் கௌரவ கந்தையா மயில்வாகனம் அவர்களைச் சந்தித்து உரையாடினேன். அப்போது சிறுவர்களின் யோகாசன வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. தன்னந்தனியாகத் தொடங்கிய இவரின் பணியால் இந்த நாவற்குழிப் பிரதேசமே பயன்பெறுகின்றது. சிறுவர் பெரியோருக்கான யோகாசன வகுப்பு, கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கான வகுப்பு, சமயபாடவகுப்பு, தையல்வகுப்பு, கணனிவகுப்பு என நடாத்திக் கொண்டிருக்கிறார். அத்தனை வகுப்புக்களும் இலவசமாகவே நடைபெறுகின்றது. இவற்றிற்கான நிதிச்செலவுகளை இவரது குடும்பத்தவர்களே கொடுத்து உதவிசெய்கிறார்கள். இவற்றைவிட இங்குள்ள பாடசாலைகளுக்குச் சென்று பரிசில்நாட்களையும் நடத்திப் பரிசில்களை அன்பளிப்புச் செய்து மாணவர்களைக் கல்வியில் ஊக்கப்படுத்தி வருகிறார். இவைமட்டுமா இப்பிரதேசத்தில் வாழும் முதியவர்களையும் வருடாவருடம் அழைத்துக் கௌரவித்துப் பரிசில்களும் கொடுத்து அவர்களின் இறுதிக்காலங்களை நல்லபடியாக வாழவழிவகுத்துவருகின்றார். உண்மையிலேயே இச்செயற்பாட்டை ஒரு நிறுவனம்தான் செய்யமுடியும். ஆனால் ஒரு தனிமனிதனாக அதுவும் வயதான காலத்தில் இந்த அரும்பெரும் சேவைகளைச் செய்துவரும் திரு மயில்வாகனம் ஐயா அவர்களைப் பாராட்டி வணங்குகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31-08-2018 ஆம் எனது பிறந்தநாள். பல ஆண்டுகளின் பின்பு எனது சொந்த ஊரில் உறவுகளோடு ஒன்றுசேர்ந்து சொந்த பந்தம் நட்புககளுடன் சேர்ந்து கொண்டாடிய நிகழ்வு மறக்கமுடியாத சம்பவமாகியது. அதாவது எளிமையான முறையில் தேநீர் விருந்துதான் இரவு நடைபெற்றது. அன்றைய தினம் மதியம் அதுவும் மறக்கமுடியாத நிகழ்வுதான். அதாவது கைதடியிலுள்ள விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு எனது உறவுகளுடன் சென்று அங்கு உதவிபெற்று வாழ்ந்துவரும் மாற்றுத்திறனாளிகள் என்றுகூறப்படும் இயலாதோருக்கு மதிய உணவுச் செலவைப் பொறுப்பேற்று, அவர்களோடு நாம் சேர்ந்து மதிய போசனம் உண்டோம். அவர்களைச் சந்தோசப்படுத்த பாடல்கள் பல எங்களாலும் அவர்களாலும் பாடப்பட்டன. 25.000-00 ரூபாவை அன்பளிப்பாக வழங்கினேன். எனது பிறந்தநாளில் இப்படி ஒரு வைபவம் என் வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமாகப் பதிவு பெற்றது மனதுக்கு மகிழ்வைத் தந்தது.





பலவருடங்களாக எமது மண் சஞ்சிகையூடாக வாசகர்களின் பெரும் நிதி உதவியால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயபுரம் (ரூத் மிஷன்) சிறுவர் இல்லத்திற்கும் உதவிவருகிறோம். 31.08.2018 அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பிறந்தநாள் பரிசாக அந்த இல்லத்தின் பாவனைக்காக ஒரு கை மழிக்கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினேன். மேலும் இல்ல நிர்வாகி வணக்கத்துக்குரிய சகோதரி கிளாடிஸ் ஜெயரட்ணம் அவர்களிடம் இந்த இல்லத்தின் தேவைகளுக்காக 25.000-00 ரூபாவையும் வழங்கினேன்.





இப்படியாக எனது 2018 விடுமுறை நல்லமுறையில் கழிந்ததை எண்ணி ஆனந்தப்படுகின்றேன். இம்முறை கிழக்கு மாகாணத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டவில்லை. இருந்தும் அவர்களுக்கான சேவைகள் தொடர்கின்றன. வடபகுதியின் பல ஊர்களுக்கும் சென்று பல உறவுகள் நண்பர்களைச் சந்தித்ததில் பெரும் சந்தோசம். மிகுதி இரண்டுநாட்களும் நான் திருமணம் செய்த ஊரான உரும்பராயில் களித்துக்கொண்டு 4.8.2018ல் கொழும்பு திரும்பி 5.8.2018ல் யேர்மனி வந்து சேர்ந்தேன். அன்பர்களே இக்கட்டுரையை வாசிக்கும் நீங்கள் எதாவது கருத்துக்கள் இருப்பின் என்னோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

-நன்றி- (முற்றும்)

---

பொன்மொழி:-

உண்ணமுடியாத கடவுளுக்கு உணவளிப்பதைவிட
உண்ணக்கூடிய வறியவர்களுக்கு உணவளியுங்கள்
அது கடவுளுக்குக் கொடுப்பதை விட மேலானது!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் குலேந்திரன் (கனடா)
Pon Kulendiren



1939 செப்டெம்பரில் பிறந்த இவர், யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்று கொழும்பு பல்கலைகத்தில் பௌதிகத்துறையில சிறப்பு பட்டம் பெற்றவர். அதன் பின் தொலை தொடர்பு பொறியியலாளராக இரு வருடங்கள் கொழும்பு பல் கலைக் கழகத் தி லும், அக்குவுனைனாஸ், கல்லூரிலும் தமிழ் சங்கத்திலும் பௌதிக விரிவுரையாளராக இருந்து இலங்கை தபால் தந்தி திணைக்களத்தில் சிரேஷ்ட அத்தியட்சகராக சேர்ந்து , 1979 வரை கடமையாற்றி அதன் பின்னர் ஓமான் ,துபாய், அபுதாபி, சார்ஜா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தொலை தொடர்பு (Telecommunications) துறையில் சிரேஷ்ட பொறியியலாளராக வேலை செய்தவர். பின்னர் கனடா "டெலஸ்" தொலை தொடர்பு ஸ்தாபனத்தில் சிரேஷ்ட முகாமையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

பொன் குலேந்திரன் பத்து வயது முதல் கொண்டு மாணவன் என்ற கையெழுத்து பத்திரிகை நடத்தியவர். வீரகேசரிக்கு கதிர்காம யாத்திரை என்ற பயணக் கட்டுரையும் நாய் குட்டி விசரி என்ற சிறு கதை எழுதினவர். இலங்கை வானொலி சிறுவர் மலர் நிகழ்ச்சிக்கு நாடகங்கள் எழுதினவர். தினகரன் வீரகேசரிக்கு சிறுகதைகள் எழுதி வந்தவர் . கனடா பிரஜையான பொன் குலேந்திரன் சிறு வயது முதற் கொண்டே எழுதத் தொடங்கியவர். "குவியம்" என்ற இணையத்தள சஞ்சிகையை 2000 ஆம் ஆண்டு முதல் நடத்தியவர். கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் வெளிவரும் தமிழ் பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறார். பீல் மிசிசாகா முது தமிழர் சங்கத்தில் நான்கு வருடங்கள் தலைவராக இருந்தவர். அப்போது பல திட்டங்களை செயல் படுத்தியவர் . முதுவேனில் என்ற வருடாந்த சஞ்சிகையை ஆரம்பித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கலத்திலும் தமிழிலும் எழுதக் கூடியவர்

இதுவரை சுமார் 33 தமிழ் ஆங்கில மின்நூல்களும் எழுதி உள்ளார். இவற்றில் அழகு முகங்கள் விழவு இல்லம் ஆகிய நூல்களுக்கு தமிழ் நாட்டிலும் கனடாவிலும் விருதும் பரிசும் கிடைத்துள்ளன. தமிழ் நாடு காமராசர் பல்கலை கழகம் தமிழ்நாடும் மலேசிய அகில உலக சிறுகதைகள் போட்டியில். கலந்து கொண்ட 440 கதைகளில் இவரது "முடிவு" என்ற சிறுகதைக்கு மூன்றாம் பரிசு கிடைத்தது .
இவர் எழுதி நூல் பட்டியல் இது
ஆங்கிலத்தில்:

Short Stories:-
Short Stories from Sri Lanka
Sufferings of Innocent Souls (HR Violations in Sri Lanka
Strange Relationship (21 short stories)
A Bouquet of 15 Short Stories (eBook)
Novel:-
The Dawn (Novel)> Printed book and Ebook
Generations – eBook
Articles:-
Hinduism a Scientific Religion> Printed Copy and Ebook

அகிய நூல்களையும்
தமிழில்:-
சிறுகதைத் தொகுப்புகள்
விசித்திர உறவு, (21 சிறு கதைகள் )
அழகு (12 சிறு கதைகள்) - ரொரன்றோ எழுத்தாளர் சங்கத்தின் பரிசு பெற்றது
முகங்கள் ( 21 சிறு கதைகள்- சென்னை வெண்மணி அறக்கட்டளை வெண்மணி இலக்கிய விருது பெற்றது
பார்வை ( 21 சிறு கதைகள் ) மின்நூல்
கவிதைகள்:-
அருவி ( 30 கவிதைகள்),
கட்டுரைகள்:-
வளரும் வணிகம் ,
அறிவுக்கோர் ஆவணம்,
கோபுர தரிசனம், கோடி புண்ணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIST OF BOOKS WRITTEN BY PON KULENDIREN
பொன் குலேந்திரன் எழுதிய நூல்கள்

| Title | Year | Type | Category | Language |
|---|---|---|---|---|
| 1-அழகு | 1995 | Paperback | சிறுகதைகள் | தமிழ் |
| 2-விசித்திர உறவு | 1996 | Paperback | சிறுகதைகள் | தமிழ் |
| 3-அருவி | 1996 | Paperback | கவிதைகள் | தமிழ் |
| 4-வளரும்வணிகம் | 1998 | Paperback | கட்டுரைகள் | தமிழ் |
| 5-அறிவுக்கு ஓர் ஆவணம் | 2001 | Paperback | கட்டுரைகள் | தமிழ் |
| 6-முகங்கள் | 2010 | Paperback | சிறுகதைகள் | தமிழ் |
| 7-காலம் | 2016 | Paperback | சிறுகதைகள் | தமிழ் |
| 8-விழுவு இல்லம் | 2015 | Paperback | நாவல் | தமிழ் |
| 9-கோபுரதரிசனம் கோடி புண்ணியம் | 2000 | Paperback | கட்டுரைகள் | தமிழ் |
| 10-வாழு வாழவிடு | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 11-தலைமுறைகள் | 2017 | eBook | நாவல் | தமிழ் |
| 12-முள்வேலிக்குப் பின்னால் | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 13-20 வணிகக் கதைகள் | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 14-ஜன்னல் | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 15-வாழ்க்கை | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 16-விதி | 2018 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 17-இலங்கையில் நடந்தகொலைகள் | 2018 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 18முது தமிழர் முத்துமாலை | 2017 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 19-உரிமை மீறல் கதைகள் | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 20-குடும்பம் ஒரு கதம்பம் | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 21-பார்வை | 2016 | eBook | சிறுகதைகள் | தமிழ் |
| 22-பாட்டி சொன்ன மரபுக் கதைகள் | 2017 | eBook | சிறுகதைகள் | தமிழ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23-THE TIME ( Science Fiction) 2018 P/B & eBook Science Stories English
24-Strange Relationship 2016 P/B & eBook Short Stories English
25-The Colombo Coolie 2018 P/B & eBook Novel English
26-The Ransom 2018 P/B & eBook Novel English
27-Generations 2017 P/B & eBook Novel English
28-Hinduism a Scientific Religion2015 P/B & eBook Articles English
29-The Hindu Temples in Sri Lanka 2017 P/B & eBook Articles English
30-The Fate 2017 eBook Short Stories English
31-Short Stories from Sri Lanka 2004 P/B & eBook Short Stories English
32-The Dawn 2015 P/B & eBook Novel English
33-Sufferings of Innocent souls 2015 P/B Short Stories English

**ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.**
**தற்போது கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள மிசிசாகா நகரில் வாழும் இவரோடு மின் அஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்**

Kulendiren2509@gmail.com

**மண் சஞ்சிகையோடு இவர்...**

**மூத்த எழுத்தாளரான திரு குலேந்திரன் ஐயா அவர்கள். கடந்த பல வருடங்களாக மண் சஞ்சிகையில் பல தரப்பட்ட ஆக்கங்களைப் படைத்து வருகின்றார். சிறுகதை, கட்டுரை, கவிதை, அறிவியல் விடையங்கள், அரசியல் கட்டுரைகள், வர்த்தக விஞ்ஞானக்கட்டுரைகள் எனப் பலவகையான ஆக்கங்களை உடனுக்குடன் எழுதும் ஆற்றல் படைத்தவர்.**

**முகம்தெரியாத இந்த உறவு இத்தனை வயதிலும் கணனிப் படைப்பில் கைவந்த வித்துவானாகவும் திகழ்வதை எண்ணி வியக்கின்றோம். இவரின் படைப்புக்களை ஆழ்ந்து நோக்கினால் இவரை சமூகமாற்றத்துக்கான ஒரு பேனாப் போராளியாகவே நான் காண்கின்றேன். தொடரட்டும் ஐயா அவர்களின் எழுத்துப் பணிகள். நீண்ட ஆயுள்பெற்று தமிழுக்குப் பணிசெய்ய மண் சஞ்சிகையின் வாசகர்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்!...**

**ஆசிரியர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகச் செய்திகள் சில....

-2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில், பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகளவு நிதி ஒதுக்கப்படவுள்ளதாக, நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதற்கமைய, 2019ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக 306.1 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.2018 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக, 290 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

-இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த ஆண்டில் 60 கோடி ரூபாவை வழங்குவதாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.2018 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் நிதியுதவியுடன் 1.8 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் மூலம் 9,344 கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருள்களும் 8,637 சிறிய ஆயுதங்களின் வெடிபொருள்களும் மீட்கப்பட்டன.

-இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 408 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் செப்டம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

-2019ஆம் ஆண்டில் பயணிக்க கூடிய சிறந்த நாடுகள் பட்டியலில் உலக நாடுகளை பின்தள்ளி இலங்கை முதலிடம் பிடித்துள்ளது.Lonely Planet,ன் சாகச நிபுணர்கள் வெளியிட்ட 2019ஆம் ஆண்டில் பயணிக்க கூடிய சிறந்த நாடுகள் பட்டியலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.அவ்வாறு பெயரிடப்பட்ட 10 நாடுகளில் முதல் இடத்தில் இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

-முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டகுடும்பங்கள் 6765 வாழ்ந்துவருவதாக மாவட்டசெயலகபுள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேசசெயலர்பிரிவுகளிலும் 43766 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளன.இதில் 6765 குடும்பங்கள் பெண்தலைமைத்துவங்களைகொண்டன. இதில் 5571 குடும்பங்கள் விதவைகளாகக்காணப்படுகின்றனர். 2296 பேர்மாற்றுத் திறனாளிகள் காணப்படுவதாகபுள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பளிப்பு 75-00யூரோ!....

நத்தார் விடுமுறையை கொண்டாடும் நோக்கில் யேர்மனி கேவேலார் , வீட்சே நகர பெண்கள் ஒன்றுகூடல் நடைபெற்றது. காலை உணவை உண்டபடி , பெண்கள் சமூகத்தில் செய்ய வேண்டிய , தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி கலந்துரையாடினர். அத்துடன் உடல் நலம் பேணும் விடயங்கள் பற்றி உரையாடியதுடன் உடல் நலத்துக்கான அப்பியாசங்களை பயிற்சி செய்தனர் . சந்தோஷமான இந்நிகழ்வை திருமதி கீதா பரமானந்தன் ஒழுங்குசெய்திருந்தார். நிகழ்வின் இறுதியில் தாயக சிறுவர்களுக்கு தம்மாலான சிறு உதவிகளை செய்து அவர்களையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்கிற தம் மனக்கிடக்கையை நிறைவேற்றும் வகையில் திருமதி கலைவாணி. ஏகானந்தராஜா நிதி சேகரிப்பை முன்னெடுத்தார் பெண்கள் எல்லோரும் மகிழ்வுடன் பங்களிப்பு செய்திருந்தனர். அந்த பணம் மண் சஞ்சிகையின் மனிதநேயப் பணிக்காக ஆசிரியர் வ . சிவராஜா அவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டது .. இவர்களின் முன்மாதிரியான இந்த மனிதநேயப் பணியினை வாழ்த்துகிறோம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரச இலக்கிய விருது வழங்கல் - 2018

சாகித்தியரத்னா : மு.பொன்னம்பலம் (மு.பொ)
சுய நாவல் இலக்கியம் : ஒரு கிராமத்து அத்தியாயம்- எஸ். ஜோன்ராஜன்.
சுய கவிதை இலக்கியம் : மண்கோழி -சோலைக்கிளி.
சுய சிறுகதை இலக்கியம் : உயிருதிர் காலத்தின் இசை -பதுளை சேனாதிராசா.
சுய நானாவித இலக்கியம் : 1915 கண்டிக் கலவரம் - என்.சரவணன்.
சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு : இந் தியஅறிவாராய்ச்சியியல் -பேராசிரியர் ஞா. ஞானக்குமாரன்.
சுய சிறுவர் இலக்கியம் : வில்லூரானின் சிறுவர் பாடல்கள் -வில்லூரான்(க.முரளிதரன்)
சுய இளையோர் இலக்கியம் : பாலர் விருத்தி பாடற் பனுவல் - ச.இ.ஐங்கரலிங்கம்.
சுய பாடலாக்கம் : சிறகு முளைத்த சிந்துகள் -அக்கரையூர் அப்துல் குத்தூஸ்.
மொழிபெயர்ப்பு : எனது தேசத்தை மீளப்பெறுகிறேன்-எம்.ரிசுஷான் செஷரிப்
மொழிபெயர்ப்பு நானாவித. இலக்கியம் : சைமன் காசிச் செட்டியின் ''தமிழ் புளூறாக் ஶூ"
தமிழ் விபரப்பட்டியல் -சா.திருவேணிசங்கமம்.(ஆங்கிலம்)
மொழிபெயர்ப்பு நாவல் இலக்கியம் : உச்சிமலை முகடுகள்- திக்குவல்லைகமால்.(மூலம்:உசுஷ்கந்துபாய-கமல் பெரேரா- சிங்களம்)
மொழிபெயர்ப்பு கவிதை : தென்னாசியக் கவிதைகள் -சோ.பத்மநாதன் (சோ.ப) SAARC POETRY (ஆங்கிலம்)
நாடக இலக்கியம் : மானிடப்புயல்- ரா.தனஞ்செயன்.

தகவல்:-"ஞானம்" சஞ்சிகை கொழும்பு

---

கொழும்பிலிருந்து வெளிவரும் "ஞானம்" சஞ்சிகையைப் படித்திடவேண்டுமா.......

<editor@gnanam.info> தொடர்புகளுக்கு தொ.பேசி. 0094-11-2586013 0094-77-7306506 0094-11-2362862 www.gnanam.info www.gnanam.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச் செலவுகளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00
02. திருமதி.யஜிந்தா ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-மட்டக்களப்பு - 480-00
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-கிளிசொச்சி - 480-00
04. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா -480-00
06. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா - 480-00
07. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
08. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
10. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிநொச்சி - 480-00
11.செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு -240-00
12. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00
13. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 30-09-2018 + 27-06

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

08. திருமதிகள் கலைவாணி,கீதாராணி - Weeze + 75-00
(பெண்கள் வட்டம் தேநீர் விருந்து அன்பளிப்பு)


---------

+ 602-06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | + 602-06 |
| அனுப்பியது:- | | |
| (1)அன்பகம்(சிறுவர் காப்பகம்) வவுனியா | -680-00 | |
| வங்கிக் கட்டணம் 1x25-00 | - 35-00 | |
| | -------- | |
| | -715-00 | |
| வங்கிவரி 01.10.2018 - 31.10.2018 | - 11 -12 | |
| 01.11.2018 -30.11.2018 | - 12-36 | |
| | -------- | |
| | 738-48 | - 738-48 |
| | | -------- |
| 30-11-2018 மீதி கையிருப்பு (மேலதிகச்செலவு) | | - 136-42 |
| | | --------- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பளிப்பு - 800-00 யூரோ

தாயகத்தில் இன்னலுற்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு "மண்" சஞ்சிகையின் வாசகர்கள் நீண்டகாலமாக உதவிவருவதை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள் என நம்புகிறோம்.இந்த வகையில் மேலும் ஒரு படியாக எமது வாசகர் குடும்பம் யேர்மனி ஒபகௌசன் நகரில் வசிப்பவர்களான திரு,திருமதி டொறின்-மகாலிங்கம் குடும்பத்தவர்கள் 800-00 யூரோ பெறுமதியான பொருட்களை தாயகம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயபுரம் ரூத் இல்லத்திற்கு (சிறுவர் காப்பகம்) அனுப்பி வைத்துள்ளனர். 800-00யூரோ பெறுமதியான பொருட்களுடன் அனுப்பும் பொதிச் செலவையும் தாம் பொறுப்பெடுத்து அனுப்பியுள்ளனர். இந்த நல்மனம் படைத்த, மனிதநேயம்மிக்க இக்குடும்பத்தவர்களின் நற்பணிக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டல்லா மகிழ்ச்சி கொள்கிறோம். அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களின் விபரங்களின் நிழற் படங்களையும் அவை உரிய இல்லத்திற்குச் சென்றடைந்த படங்களையும் இங்கே காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










அனுப்பிய பொருட்களின் விபரம்.... அனைத்தும் புதிய பொருட்கள்....

-மடிக்கணனி -1

-பஞ்சாபி பெரியது - 22

-பஞ்சாபி சிறியது - 20

-பேனா பென்சில் பெட்டி - 15

-கலர் பென்சில் பெட்டி - 8

-ரின் கலர் பெட்டி சிறியது -10

-ரின் கலர்பெட்டி -18

-இனிப்புப் பைக்கட் - 13

-பிஸ்கட் பைக்கட் - 8

-சில்வர்(வெள்ளி)சாப்பாட்டுத்தட்டு-20

-சில்வர்(வெள்ளி)டம்ளர்(குவளை)-20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பானவர்களே!...மனிதநேயம் கொண்ட நல்லுள்ளங்களே!...**

திரு,திருமதி மகாலிங்கம் குடும்பத்தவர்கள் இன்று-நேற்று அல்ல நீண்டகாலமாக இப்படியாகத் தாயக ஆதரவற்றோருக்கு உதவும் மண் சஞ்சிகையின் பணிகளோடு இணைந்து உதவிவருகிறார்கள் என்பதை வாசகப் பெருமக்களுக்கு அறியத்தருகின்றோம். இவர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்!...

இக்குடும்பத்தவர்களின் முன்மாதிரியைப் போல் நீங்களும் பணமாகவோ பொருளாகவோ உதவலாம். தாயகத்தின் போர் வடுக்களால் நிர்க்கதியாகத் தவிக்கும் ஆதரவற்றோர், வறியோர், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு உதவி அவர்களையும் வாழவைக்கவேண்டிய மனிதநேயக் கடமையில் நீங்களும் இணைந்துகொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களிடமுள்ள புதிய உடைகள் மற்றும் பணம் போன்ற உதவிகளை எங்களுக்கு அனுப்பி வைத்தால் அவை தாயகத்துக்கு அனுப்பப்பட்டு அவை கிடைக்கப்பெறும் இல்லங்களின் கடிதங்களையும் பற்றுச்சீட்டுக்களையும் நம்மால் பெற்றுத்தரமுடியும். அன்பர்களே!.."சிறு துளி பெரு வெள்ளம்" தங்கள் ஆதரவுக் கரங்களைப் பற்றி நிற்கிறோம்!..வரும் நத்தார் - புதுவருட கொண்டாட்டங்களில் நீங்கள் செலவு செய்யும் தொகைகளில் சிறு துளியை அன்பளிப்பாக வழங்கி ஆண்டவன் கிருபையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நன்றி - ஆசிரியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Home Of Joy For Special Need People

Lourdes Joseph<josephlourdes708@gmail.com>

Dear Sir,,

"Peace be with you in the Lord "

Happy Deepavali . After a long time I met you friend i Vavuniya and he gave me Manna Magazine for me to write to you. He also said that you searched for me to meet me.Hope you are in Good health by the Grace of God? I am sure he would have given message that he found me.

Now after 30 yrs service in Kilinochchi to find a permanent place to take care of the Differently able people ,now we have started a Home of Joy for Special Need People i Mankulam in Mulaitivu District with 10 c children

Now I Like to know what kind of Project you can support our Home. Is their any Application to fill. Kindly Let me know. I am relay grateful for the support you gave before our Displacement.

Let's Pray and work together for the salvation & Liberation of our People.

Thank you and God Bless You,

Sr.Lourdes.Joseph. Sr. M.L.Joseph

Home of Joy A9 Road Mankulam Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் 777 படைப்பாளர்கள்..........

**கீழ்வரும் பெருநாலிற்கு உங்கள் படைப்பினை எதிர்பார்க்கின்றோம். muganoolmutram2018@gmail.com எனும் முகவரியுடன் இணைக.**

**ஈழத்தின் 777 படைப்பாளர்கள் பங்கேற்போடு வெளிவரவுள்ள ''ஈழமுகங்கள் 777" பெருந்தொகுப்பு.**

முகநூல் என்பது நம் முன்னோர்கள் கற்பனை செய்திராத ஒன்று. நமது காலத்தில் அது கிட்டியது நன்று. முகநூல் என்னும் பெருந்தளத்தில் கணக்கிலடங்கா நற்படைப்புகள் பதிவாகி இருக்கின்றன. இன்னும் பதிவேறி வருகின்றன. இவை பல்வித அம்சங்களாய் பரவியிருக்கின்றன.இவ்விதமான படைப்புகள் முகநூலோடு முடிந்திடாமல் அச்சாகி ஆவணமாகி நிலைக்கவே "முகநூல் முற்றத்து வெளியில்" சஞ்சரிக்கும் படைப்பாளர்களின் படைப்புகளை உள்ளடக்கி ''ஈழமுகங்கள் 777" எனும் பெருந்தொகுப்பினைக் கொண்டுவர எண்ணினோம். ஏற்கத்தகு எவ்வகை படைப்பாயினும் இந்நாலில் இடம்பெறும். இலங்கையைச் சேர்ந்த(புலம்பெயர்ந்தோர் உட்பட) எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் உறவுகளும் இந்நாலின் படைப்புகளுக்காக உள்வாங்கப்படுவர். கீழ்வரும் விதிமுறைகளுக்கமைய படைப்புகள் உள்வாங்கப்படும். இப்பெருந்தொடுப்பின் வெளியீட்டு விழாவானது முகநூலின் நல்லகங்களின் பங்கேற்போடு தனித்துவமான முறையில் ஒழுங்கு செய்யப்படும்.

01. இந்நாலில் பங்கேற்க விரும்புபவர் முகநூற் கணக்குடையவராக இருத்தல் சிறப்பானது. ஆயினும் குறிப்பிட்டளவான முகநூல் பாவனையற்றோரின் படைப்புகளும் இணைக்கப்படும். இலங்கையைச் சேர்ந்த(புலம்பெயர்ந்தோர் உட்பட) எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் முகநூற் பாவனையாளர்களும் இந்நாலில் பங்கேற்கலாம். முகநூல் பாவனையாளர்களாக இருந்து மரணித்தவர்களின் படைப்புகளையும் ஏற்புடையோர் அனுப்பி வைக்கலாம். முகநூற் பாவனையற்றோர் தமது படைப்பு குறித்து இப்பதிவிலுள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம். 777 பேர்களின் படைப்புகள் நூலில் இடம்பெறும்.

02. பொதுவான சிறு கட்டுரைகள், குறுங்கதைகள், துணுக்குகள், கவிதைகள், தனிப்பட்டவை அல்லாத தகுதிமிகு புகைப்படங்கள், செய்திப் பகிர்வுகள், ஆய்வுசார் பத்திகள், அரசியற் சார்ந்த எழுத்துகள், கலை இலக்கிய சமூகம் சார்ந்த நிகழ்வுப் பதிவுகள், நூல் விமர்சனங்கள், பகிர்கைகள், மருத்துவ, விஞ்ஞான சுயவாக்கப் பகிர்வுகள், தத்துவார்த்த பதிவுகள், ஓவியங்கள், சிறுகதைகள், அறநெறி நற்பகிர்வுகள், ஏற்கத்தகு போர்க்கால பதிவுகள் உட்பட இன்னும் பிற நூலுக்குத் தகுதியானவற்றை அனுப்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. எழுத்து வடிவ பதிவுகள் ஏ4 அளவுதாளில் ஒரு பக்கத்திற்குள் அடங்குதல் சிறப்பானது. அதிகமெனில் பரிசீலித்து ஏற்கப்படலாம். பங்கேற்பாளரின் ஒரு படைப்பு மட்டுமே உள்வாங்கப்படும். சமூகத்திற்கு ஏற்பற்றதும், தனிப்பட்டதுமான புகைப்படங்கள் ஏற்கப்படாது.
04. நூலில் இடம்பெறும் ஒருவரின் முகநூல் முகவரியுடனான சுயவிபரப்படம் பதிவேற்றப்படுவதோடு, முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி என்பனவும் இடப்படும். தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி என்பவை கட்டாயமானதல்ல. முகவரியை முழுமையாக இட விரும்பாதோர் அதனைத் தவிர்க்க இயலும்.
05. ஒருவரின் முகநூலில் அவரல்லாத படம் சுயவிபரப் படமாக இருப்பினும் ஏற்கப்படும். நூலிற்கு படைப்பினை அனுப்புபவர் சுயவிபரப் படத்தினை முகநூற் பாவனைப் பெயரோடு அனுப்பலாம். அல்லது நூலாக்கக் குழுவினர் குறித்த பணியைச் செய்துகொள்வர். தேவைகருதி பக்கவடிவமைப்பு தனியான பட அமைப்புடன் நூலாக்கப்படலாம். எனவே படைப்புடன் தமது கடவுச்சீட்டு அளவான புகைப்படத்தினை இணைக்கலாம். புகைப்படம் அத்தியாவசியமானதல்ல.
06. படைப்புகளை muganoolmutram2018@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அல்லது "முகநூல் முற்றத்து வெளியில்" என்னும் முகநூலின் பற்றியம்(மெசஞ்சர்) வழியாகவோ அனுப்பலாம்.
07. தகவல்கள் மற்றும் பிற விடயங்களுக்கான தொலைபேசி எண்கள். 0094 775892351, 0094 779009491, 0094 778067962, 0094 7750067960, 041 783221212
08. தகவல் வெளியிடப்படும் நாளில் இருந்து இரண்டு மாதங்கள் வரை படைப்புகள் ஏற்கப்படும்.
09. முகநூற் பாவனையாளர் மற்றும் படைப்பு என்பன ஏற்ற வழிகளில் உறுதிசெய்யப்படும். ஏற்கனவே வெளியான பதிவெனில் திகதியை இடுவது சிறப்பானது. புதிய படைப்புகளும் ஏற்கப்படும்.
10. தொடர்பிற்கான மேலதிக முகநூல் முகவரிகள்
1. யோ புரட்சி
2. Vijay printing press
3. Arivirutchcham mullaimaha
11. குழுமத்தினரால் தேடல் செய்து அடையாளம் காணப்படும் படைப்புகள் உரியோர் அனுமதி பெறப்பட்டு நூலில் இணைக்கப்படும்.
12. முகநூற் பாவனையற்றோர் மேலதிக தகவல்களை தொலைபேசி எண்ணின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செம்பியன் செல்வன் ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி (2018) முடிவுகள்

முதற்பரிசு - ரூபா ஐயாயிரமும் சான்றிதழும்
1. பயங்கரவாதியின் செல்லமகன்
ஈழநல்லூர் கண்ணதாசன், 203 புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்
இரண்டாம் பரிசு - ரூபா மூவாயிரமும் சான்றிதழும்
2. யாரோ ஒளிந்திருக்கிறார்கள்.
கே.எஸ்.சுதாகர், அவுஸ்திரேலியா
மூன்றாம் பரிசு - ரூபா இரண்டாயிரமும் சான்றிதழும்
3. வீழ்வேனென்றோ நினைத்தாய்...?
அன்டனூர் சுரா, மகாத்மாநகர், புதுக்கோட்டை மாவட்டம் தமிழ்நாடு.

பின்வரும் கதைகள் பரிசுச் சான்றிதழ்கள் பெறுகின்றன.

4. காலத்தால் கரையாத நினைவுகள் - தேவகி கருணாகரன், அவுஸ்திரேலியா
5. தப்பான முடிவுகள் - ச.முருகானந்தன், 81, மனிங்பிளேஸ், கொழும்பு
6. நல்லதொரு மகனாகப் போகிறேன் - செல்லையா சதீஸ் குமார், (விவேகானந்தனூர் சதீஸ்,) இல. 177 விவேகானந்த நகர் கிழக்கு, கிளிநொச்சி.
7. வீழ்வேனென்று நினைத்தாயோ?- மு.பு. முகம்மது ராபி, 356/7, கண்டிவீதி, பாலையூற்று, திருகோணமலை.
8. காசு வந்ததும் - நவஜோதி ஜோகரட்ணம், லண்டன்.
9. உரிமை - உ .நிசார், 70/3 புதிய கண்டி றோட், மாவனல்ல.
10. காணாமல் போன கலைஞன் - வயிரமுத்து சிவராசா, ஜேர்மனி.

நடுவர்கள் : புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், திருமதி ராணி சீதரன், திருமதி வசந்தி தாயாபரன், திருமதி ஞானம் ஞானசேகரன் (ஞானம் இணை ஆசிரியர்), திரு.தி. ஞானசேகரன் (ஞானம் பிரதம ஆசிரியர்).

பரிசளிப்பு 16-12-2018 ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெறும் (தகவல் "ஞானம்" சஞ்சிகை-கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசேடதேவையுள்ளோர் (வலுவிழந்தோர்) இல்லம் - மாங்குளம் / இலங்கை

**Home Of Joy For Special Need People – Mankulam / Srilanka**



ரூத் மிஷன் சிறுவர் இல்லம் - ஜெயபுரம் - கிளிநொச்சி / இலங்கை

**Ruth Mission Childern Home – Jeyapuram – Kilinochi / Srilanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 192

## Merry Christmas
## &
## a Happy New Year

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org